GOKULAM

அக்டோபர் 2007 ★ விலை ரூ.8/- ★ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



டச்லே...

ீங்களே
யாரிக்க...
மினி
கோகுலம்'



வெல்கம்
08:08:08



கோகுலம் 25

விளையாட்டுச் சிறப்பிதழ்!



கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர்கள்

தொடர்ச்சி 3-ஆம் அட்டையில்...

விளையாட்டுச் சிறப்பிதழ்!

கோகுலம்

அக்டோபர் 2007 மலர் : 25 இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

உள்ளே...

நீங்களே தயாரிக்க... 37



புதுமையான படக்கதை! 33



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட்லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...

விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல, அது உடலை வலிமையாக்கும்; மனத்தை தெளிவாக்கும். வெவ்வேறு நாடுகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளை வைக்கும்போது, அங்கே வேறு மொழி, வேறு மதம், வெவ்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள் ஒன்றாகச் சேருவார்கள். தங்களுக்குள் அறிமுகம் செய்து கொள்வார்கள். அப்போது அவர்களிடையே நட்பு உண்டாகும்; நேசம் ஏற்படும். இந்த நோக்கத்துக்கும் சேர்த்துதான் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஆகவே, விளையாட்டுப் போட்டிகளை வெறும் பந்தயமாகப் பார்க்காமல் பாசம் வளர்க்கும் பந்தமாகப் பார்க்க வேண்டும். வெறியை வளர்க்காமல், நேசத்தை வளர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் விளையாட்டை முழுமையாக அனுபவித்த திருப்தி கிடைக்கும். நீங்களும் உங்கள் நண்பர்களுடன் விளையாடுகையில் சண்டையின்றி நேசத்துடனே விளையாடுங்கள். வெற்றியைப் போலவே, தோல்வியையும் கோபமின்றி ஏற்றுக் கொள்ளுங்கள். அதுதான் உங்களை உண்மையான வீரனாக்கும்!

அன்புடன்
கோகூ



நேசம் வளர்ப்போம்!



படம் : ஸ்ரீஹரி

கோகுலம் வெள்ளி விழா மற்றும் அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி-2007 முடிவு!

இப்போட்டிக்கு வந்த ஏராளமான கதைகளில் முதல் சுற்றுக்குப் பிறகு, பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்க, நடுவர்களாக கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் **ஈ.எஸ்.ஹரிஹரன் (ரேவதி)**, எழுத்தாளர் **மருதன்** கலந்து கொண்டனர். இவர்களுடன் கோகுலம் ஆசிரியர் **சீதா ரவி** அவர்களும் பங்கேற்றார். கவனமான பரிசீலனைக்குப் பிறகு, பரிசுக்குரிய கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. முதல் பரிசுக் கதை இந்த இதழில். மற்றவை அடுத்தடுத்த இதழ்களில் இடம் பெறும்.

முதல் பரிசு ரூ 1000/-

காணாமல் போன கடல் தேவதை!

எழுதியவர்: **சி. இராகவி**, பன்னிரண்டாம் வகுப்பு, மேக்ஸ்வெல் மேனிலைப்பள்ளி, தஞ்சாவூர்.

இரண்டாம் பரிசு ரூ 500/-

நரி வளர்த்த புலிக்குட்டி!

எழுதியவர்: **ஏ.ஷர்மிளா**, பத்தாம் வகுப்பு, முருக தனுஷ்கோடி மேனிலைப்பள்ளி, சென்னை.

மூன்றாம் பரிசு தலா ரூ.250/-

1. ***வாழ்வின் பயன்!*** எழுதியவர்: **ஆர். காஞ்சனா**, பத்தாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, கோவிலம்பாக்கம்.

2. ***மனித நேயம்!*** எழுதியவர் : **ரா.ரம்யா**, பன்னிரண்டாம் வகுப்பு, அவிலா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, கோவை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்; கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!



காணாமல் போன

ராதா எட்டாம் வகுப்பு படிக்கும் சுட்டிப் பெண். சற்றும் பொறுப்பே அற்றவள். கண்டதைக் கண்ட இடத்தில் போட்டுவிட்டு தேடுவதே அவள் வேலை. அன்றும் அப்படித்தான், இரவு ஒன்பது மணி. அறைக்குள் நுழைந்தாள். தாமரை போல விரிந்து மலர்ந்திருந்த மேஜை விளக்கைப் போட்டாள். படுக்கையில் புத்தகங்கள் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்தன. அதில் ஒன்றுதான் 'கடல் தேவதை' புத்தகம்!

அந்தப் புத்தகத்தின் மேல் அட்டையில் மிக அழகான கடல் அடிவாரக் காட்சி வரையப்பட்டிருந்தது. புத்தகம் முழுவதுமே அழகான வண்ணப் படங்கள் நிரம்பி வழிந்தன. பார்க்கும்போதே கதை சொல்லுவதுபோல தெரிந்தது. ராதா கையில் கிடைத்த மறுநாளே புத்தகம் பழையது போல மாறிவிட்டது. புத்தகத்தை எடுத்து அடுக்கில் வைத்துவிட்டு, தலையணையில் முகம் புதைத்துப் படுத்தாள். காற்று மெல்ல சன்னல் ஓரம் வந்து, 'கடல் தேவதை' புத்தகத்தைப் புரட்டியது. புத்தகத்தினுள்...

ஒரே பரபரப்பான சூழல்! காவல் துறை தலைவரான சுறா மீனும் துப்பறிவு பிரிவைச் சேர்ந்த இறாலும் பதினெட்டாம் பக்கத்திலிருந்து, பத்தாம் பக்கம் வந்தடைந்தன. நீண்ட நேரம் காத்திருந்து, கலெக்டர் கபிலைச் சந்தித்தன.

''சார் கடைசிப் பக்கத்திலிருந்த கடல் தேவதையைக் காணவில்லை. என்ன செய்வது? நாளை ராதா புத்தகத்தைப் பார்ப்பாள். அதற்குள் கடல் தேவதையைத் தேடி, கடைசி பக்கத்தில் சேர்த்து விட வேண்டும்'' என்றது சுறா.

கபில் உடனே தொலைபேசி மூலம் கடைசிப் பக்கத்துக்கு இரண்டு பக்கம் முன் வசிக்கும் சுட்டி நத்தையை அழைத்தார். நத்தை பத்தாம் பக்கத்துக்கு வந்தவுடன் விஷயத்தை விவரித்தார்.

நத்தை, கடல் தேவதையைத் தேடி புறப்பட்டது. புத்தகம் இருந்ததோ நாலாவது அடுக்கில்... எப்படி இறங்குவது?




சி. இராகவி

கடல் தேவதை!

ராதா சாப்பிட்டு போட்டு வைத்திருந்த சாக்லெட் தாளைக் குடை போல மடக்கி, ஒரு நூலை வைத்து பாரா சூட்டைப் போல கட்டியது.

''ஆத்தா, நீதான் காப்பாத்தணும்' என்று கண்ணை மூடிக்கொண்டு 'தொபக்' கென்று குதித்தது. நத்தையின் பாராசூட் புஸ்... என்று விரிந்து, கீழே வந்து இறங்கியது.

''அம்மாடியோ, பொழச்சேன்!'' என்று பெருமூச்சு விட்டது.



அங்கிருந்து நகர முற்பட்ட போது எதிலோ தன் கால்கள் ஒட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தது. ராதா மென்று துப்பி வைத்திருந்த 'பபுல்கம்'தான் அது! கால்களை இழுத்துப் பார்த்து ஓய்ந்தது நத்தை.

இதனை வெகு நேரமாக ராதாவின் விலங்கியல் புத்தகத்தில் அச்சிடப்பட்டிருந்த புழு பார்த்துக் கொண்டிருந்தது.

''ஹலோ, ஒரு நிமிஷம் நான் வரேன்'' என்று சொல்லி புத்தகத்திலிருந்து வெளியே வந்தது.

''நான் ராதாவின் விலங்கியல் புத்தகத்தில் இருக்கும் மண்புழு. புத்தகத்தை வெகு நாளாக கட்டிலுக்கு அடியில் போட்டு விட்டுத் தேடிக் கொண்டிருக்கிறாள்'' என்றபடி பபுல்கம்மை எடுத்து விட்டது.

''நீ யார்?'' என்று கேட்க, நத்தை விஷயத்தைச் சொன்னது.

''ஊதா நிற உடை அணிந்திருந்த ஒரு தேவதை அந்த மேஜை மேல் ஏறுவதை நான் பார்த்தேன். உன் உதவிக்கு நானும் வருகிறேன். ஆனால் மேஜை மேல் எப்படி ஏறுவது?'' கேட்டது மண்புழு.

''யாமிருக்க பயமேன்?'' என்ற நத்தை, பபுல்கம்மை கயிற்றைப் போல இழுத்து ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு மற்றொரு முனையைத் தூக்கி மேஜையைப் பார்த்து வீசியது. அது 'பசக்'கென்று மேஜை மேல் ஒட்டிக் கொண்டது. இரண்டும் அதைப் பிடித்துக் கொண்டு மேஜை மேல் ஏறின.

ஏதோ ஒரு அழுகுரல் கேட்டு இரண்டும் 'திருதிரு'வென முழித்தன.

''கீழே பாருங்கள்,'' என்றது அக்குரல். கீழே பார்த்தால் பாதி வரையப்பட்ட ஒரு பட்டாம்பூச்சி! வரைந்த வண்ணக்குச்சி, ரப்பர் எல்லாம் அப்படியே கிடந்தன. பட்டாம்பூச்சி தொடர்ந்தது.

''ராதா என்னைப் பாதி வரைந்து அப்படியே விட்டு விட்டாள் . எந்த வேலையையும் முழுதாகச் செய்யும் பழக்கம் அற்றவள்'' என்றது.

நத்தையும் மண்புழுவும் சேர்ந்து வண்ணக்குச்சியைக் கஷ்டப்பட்டு உயர்த்தி, மீதியை வரைந்து முடித்தன. பட்டாம்பூச்சி அழகாகப் பறந்து திரிந்தது. தேவதையைப் பற்றி பட்டாம்பூச்சியிடம் விசாரித்தது நத்தை.



''ஓ... அதுவா! இந்த மேஜைக்குள் சென்றதைக் கண்டேன்'' என்றது.

பென்சிலின் சீவிய முனையை பெட்டிக்குள்ளும் மறுமுனையை மேஜையிலும் வைத்து, அதில் சறுக்கியபடி, நத்தையும் மண்புழுவும் பெட்டியை அடைந்தன.

உள்ளே தேவதையை எதிர்பார்த்த நத்தைக்கு ஓர் அதிர்ச்சி! 'சூப்பர்மேன்' காமிக் புத்தகத்தின் அட்டையில் இருந்த சூப்பர்மேன் எழுந்து புத்தகத்தின் மேல் அமர்ந்துக் கொண்டிருந்தார். அறிமுகப் படலம் நடந்தது.

கடல் தேவதையைப் பற்றி விசாரித்

ததில் அது குளியலறை பக்கம் சென்றதாக கூறி, தமது காரை எடுத்துச் செல்லுமாறு கூறினார் சூப்பர்மேன்!

சூப்பர்மேனின் காரை எடுத்துக் கொண்டு புயல் வேகத்தில் குளியலறை வாசலை இரண்டும் அடைந்தன. பின் இறங்கி உள்ளே சென்றன. மண்புழு ஒரு பக்கமாகவும், நத்தை மறுபக்க மாகவும் சென்று தேடின. காலையில் குளித்த சோப்பு டப்பா, திறந்த நிலை யில் கிடந்தது. பல் துலக்கியும் அப் படியே கீழே கிடந்தது. குழாயில் தண்ணீர் ஒழுகியபடி இருந்தது. சிறிது நேரத்தில் திடீரென, தண்ணீர் அதிகரித்து ஓடியது. இரண்டும் பதறின. நத்தை

"ராதா என்னைப் பாதி வரைந்து அப்படியே விட்டுவிட்டாள். எந்த வேலையையும் முழுதாகச் செய்யும் பழக்கம் அற்றவள்."

சோப்பு டப்பாவின் மூடியில் ஏறி, பல் துளக்கியை வைத்துத் துடுப்பைப் போட் டது. ஆனால் மண்புழுவோ பாதி முழுகிவிட்டது. நத்தை அவசர அவசர மாக மண்புழுவை நெருங்கி, தூக்கிப் படகில் போட்டது. துடுப்பைப் போட்டு ஒரு வழியாக வாசலை அடைந்தன.

"செத்துப் பொழச்சாப்புல இருக்கு" என் றது மண்புழு. என்ன செய்வதென்று தெரி யாமல் உலவின. இதனை வெகு நேர மாக பரண் மேல் இருந்து ராதாவின் 'மிக்கி மவுஸ்' பொம்மை பார்த்துக் கொண் டிருந்தது. குதித்து இறங்கி களைத்திருந்த நத்தை- மண்புழு நண்பர்களை அணுகியது.

''கடல் தேவதை இந்தப் பரண் மேல் தான் இருக்கிறது. நீங்கள் மேலே செல்ல நான் உதவுகிறேன். ஆனால் என்னை யும் என் நண்பர்களான மற்ற பொம்மை களையும் இப்படி குப்பையாகப் போட்டு வைத்திருக்கும் ராதாவுக்கு புத்தி புகட்ட வேண்டும்'' என்றது மிக்கி மவுஸ்.

நத்தையும், மண்புழுவும் ஆமோதித் தன. தன் பொம்மை நண்பர்கள் உதவி யுடன் நத்தையைப் பரண் மேல் ஏற்றி யது மிக்கி.

நத்தையைக் கண்ட தேவதை அழத் தொடங்கியது. அது மிகவும் அழுக் காகத் தோற்றமளித்தது. விளக்கம் கேட்ட நத்தையிடம், தேவதை, ''நேற்று ராதா காப்பி குடித்து முடித்து, டம்ளரை என் மேல் வைத்துச் சென்றதால், நான் இப்படி அழுக்கானேன். என் அழகைக் கண்டு வியக்காதோர் எவரும் இலர். ஆனால், இனி எவரும் என்னை மதிக்க மாட்டார். கேலி செய்வர்'' என்றது. சிரித்த நத்தை, ''இதற்காகவா இங்கே வந்து விட்டாய்?'' என்று கூறி, அங்கிருந்த ராதாவின் ரப்பர் துண்டை வைத்து தேவ தையைச் சுத்தப்படுத்தியது. தேவதை பழையபடி அழகானது.

பின், நத்தை, மண்புழு, சூப் பர்மேன், மிக்கி, அதன் நண்பர்கள் மற் றும் தேவதை அனைத்தும் சேர்ந்து ராதா வின் மெத்தைக்கு அருகில் முட்களைக் கொட்டின. ''இதுதான் அவளுக்கு சரி யான பாடம்'' என்று கூறி, தேவதை ஏதோ மந்திரம் சொல்லி, ராதாவை கீழே விழச் செய்தது.

திடுக்கிட்டு கண் விழித்தாள் ராதா. இவ்வளவு நேரம் தான் கண்டது கனவு என்பது புரிந்தது. 'கனவென்றாலும் அதில் வந்த விஷயங்கள் உண்மை தானே? எடுத்த பொருளை எடுத்த இடத் தில் வைக்காமல் ஆங்காங்கே போட்டு விடுகிறோம். இனி அப்படிச் செய்யக் கூடாது. அறையையும் பொருட்களை யும் சீராக வைத்துக் கொள்ள வேண்டும்' என முடிவெடுத்தாள். ○



தீபாவளிக்குப் புத்தாடை அணிந்து கொண்ட சிறுமியின் முகத்தைப் போல இருக்கிறது சீனத் தலைநகரான பெய்ஜிங் நகரம். உலகின் பாரம்பரிய மிக்க விளையாட்டுகளுள் ஒன்றான ஒலிம்பிக் போட்டி. அடுத்த ஆண்டு அங்குதான் கோலாகலமாக நடைபெற இருக்கிறது. 29வது முறையாக நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் பெய்ஜிங் நகரம் பற்றியும் ஒலிம்பிக் போட்டிகள் பற்றியுமான சுவாரசியமான தகவல்களைப் பார்க்கலாம்.



- போட்டியை எந்த நகரம்



ஆர்.முத்துக்குமார்

வெல்கம் 08:08:08


நடத்துவது என்பதற்கான தேர்தலில் டொரொண்டோ, பாரிஸ், இஸ்தான்புல், ஒஸாகா ஆகிய நகரங்களுடன் கடுமையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது பெய்ஜிங்.

- சீன தேசத்து மக்களின் அதிர்ஷ்ட எண் எட்டு. ஆகவே, 08.08.08 அன்று இரவு 08:08:08க்கு ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இருக்கின்றன.

- ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்காக பெய்ஜிங்கில் பிரும்மாண்டமான விளையாட்டு அரங்கம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 'பறவைகளின் கூடு' (Bird's Nest) என்று பெயர் வைத்துள்ளனர்.

- எண்பதாயிரம் பேர் அமர்ந்து போட்டிகளை ரசிக்க, பெய்ஜிங் தேசிய விளையாட்டு அரங்கத்துக்குள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரங்கில்தான் ஒலிம்பிக் தொடக்க விழா, நிறைவு விழா நடைபெற உள்ளன. தவிரவும், அத்லெடிக்ஸ் போட்டிகளும் கால்பந்துப் போட்டிகளும் நடத்தப்படும்.

- பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டி





யின் சின்னமாக 'நடனமாடும் பெய்ஜிங்' (Dancing Beijing) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

● 'ஒரு உலகம் ஒரு கனவு'. இதுதான் இந்த ஒலிம்பிக் போட்டியின் வாசகம். உலகம் முழுவதிலும் இருந்து பரிந்துரை செய்யப்பட்ட 2,10,000 வாசகங்களில் இருந்தே மேற்கண்ட வாசகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

● மொத்தம் 28 வகை விளையாட்டுகளில் 302 போட்டிகள் நடைபெற இருக்கின்றன. 2004ல் நடந்த போட்டிகளின் எண்ணிக்கையைவிட ஒன்று அதிகம்.

● எல்லா விளையாட்டுகளையும் சேர்த்து மொத்தமாகப் போட்டிகளில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை மட்டும் 10,500.

● 'ஒருங்கிசையின் பயணம்' (Travel of Harmony) என்ற பெயரில் 'ஒலிம்பிக் ஜோதி' ஒன்று, சுமார் ஒரு லட்சத்து முப்பதேழாயிரம் கிலோ மீட்டர் தூரத்துக்குப் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





● உலகம் முழுக்க நான்கு பில்லியன் பார்வையாளர்கள் ஒலிம்பிக் போட்டிகளை ரசிக்க இருக்கிறார்கள். அதற்கு வசதியாக உலகம் முழுவதிலும் உள்ள 12,000 தொலைக்காட்சி நிறுவனங்கள் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

● ரசிகர்கள் நேரில் வந்து கண்டு களிப்பதற்கு வசதியாக மொத்தம் ஏழு லட்சம் டிக்கெட்டுகளை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது, 'ஒலிம்பிக் ஆர்கனைசிங் கமிட்டி'.

● போட்டிகள் நடப்பதற்காக பெய்ஜிங்கைச் சுற்றி 31 மைதானங்கள் பிரத்யேகமாகத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே இருக்கும் ஆறு மைதானங்கள் புதுப்பொலிவுடன் தயாராக இருக்கின்றன.

● போட்டிகளுக்காக வீரர்கள் தங்களைத் தயார் செய்து கொள்வதற்கு வசதியாக, மொத்தம் 59 பயிற்சி மையங்கள், உலகத் தரத்துடன் கூடிய நவீன கருவிகள் மற்றும் தளங்களுடன் உருவாக்



கப்பட்டுள்ளன.

● சீன அரசால் அனுமதி அளிக்கப்பட்ட எண்ணூறு வர்த்தக மையங்கள் பெய்ஜிங் நகரைச் சுற்றி இயங்க ஆரம்பித்துள்ளன. சட்டைகள், தொப்பிகள், குளிர்பானங்கள் என்று சகல பொருட்களிலும் ஒலிம்பிக் சின்னம் பொறிக்கப்பட்டு பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றன.

● உலகம் முழுவதிலும் இருந்து பார்வையாளர்கள் வருவதால் போக்குவரத்தில் குறைபாடு இருக்கக்கூடாது என்பதற்காக, 2500 மெகா சைஸ் பேருந்துகளும், 4500 மினி பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எங்கிருந்து வேண்டுமானாலும் போட்டிகள் நடக்கும் மைதானங்களுக்கு வந்துவிட முடியும்.



● பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் புதிதாக நிறைய சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

● போட்டிகள் நடக்கும் சமயங்களில் பெய்ஜிங் நகரில் எந்தவிதமான சட்டம் ஒழுங்குச் சிக்கலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக எழுபது புதிய சட்டங்கள் போடப்பட்டுள்ளன.

● பெய்ஜிங்கைச் சுற்றியுள்ள ஒரு சில தொழிற்சாலைகளை வேறு இடத்துக்குத் தாற்காலிகமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. முடியாத பட்சத்தில் சில மாதங்கள் மூடிவைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



கோகுலம்
இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் மூன்று மாதங்கள்தான் உள்ளன. விரைந்து அனுப்புங்கள்! கோப்பையை வெல்லுங்கள்!!




● அரசு மற்றும் தனியார் வாகனங்களில் பயணம் செய்யும்போதே, போட்டிகளைக் காண்பதற்கு வசதியாக தொலைக்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

● பெய்ஜிங் தேசிய உள் விளையாட்டரங்கம், பெய்ஜிங் தேசிய அக்வாடிக் மையம், பெய்ஜிங் ஒலிம்பிக் கிரீன் டென்னிஸ் மையம் ஆகியன போட்டிகள் நடக்க இருக்கும் பிரதான மைதானங்கள்!

சீஸன் வரும் வரை வேடந்தாங்கலுக்குச் செல்லக் காத்திருக்கும் பறவைகளைப் போல உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு ரசிகர்கள் ஒலிம்பிக் சீஸனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!





இப்பல்லாம் கிரிக்கெட், கணினி விளையாட்டுக்களைத்தான் அதிகமா விளையாடறாங்க. அந்தக் காலத்தில் குழந்தைகள் விதவிதமாக விளையாடி னாங்க. அவை எல்லாம் இருந்த இடம் தெரியாமப் போச்சு. கிராமப்புறங்களில் இன்றும் ஒரு சில விளையாட்டுக் களைச் சிறுவர் சிறுமியர் விளை யாடறாங்க. கிராமப்புற விளையாட் டுக்கள் மண்ணின் மணம் மாறாத விளையாட்டுக்கள். அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே பார்க்கலாம் வாங்க!

குத்து விளையாட்டு!

இரண்டு கைகளையும், (பூ மலருவது போல) அருகருகில் விரிந்த நிலையில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தையை, ஒரு கை விரல்களை மடக்கி அந்த விரிந்த கைகளுக்குள் குத்தச் சொல்ல வேண் டும். அந்தச் சமயம் ஒரு பாடல் உண்டு.

"குத்து குத்து
கும்மாங் குத்து
புளியங் குத்து
புள்ளையார் குத்து
புடுச்சுக்க குத்து!"

என்று பாடியபடி குழந்தையைக் குத்தச் சொல்ல வேண்டும். குத்து, குத்து என்று வரும் போதெல்லாம் குழந்தை கைகளுக்குள் குத்தும். 'புடுச்சுக்க

தேவி நாச்சியப்பன்

"குத்து." என்று சொல்லிக் குத்தும் போது, குத்திய கையைப் பிடிக்க முயல்வர். குழந்தை, குத்திவிட்டு, பிடி படாமல் விரைவாகக் கையை எடுத்து விட வேண்டும். எந்தச் சூழலிலும் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கான பயிற்சி விளையாட்டு இது.



தெளிவான பேச்சு!

குழந்தைகள் தெளிவாகப் பேச வேண்டும். அதற்காக குழந்தைகளிடம் அம்மா இந்தப் பாட்டைச் சொல்லித் தருவாள். அதை சரியாகவும் வேகமாகவும் உச்சரிக்க வேண்டும்!

"ஓடுகிற நரியிலே
ஒரு நரி சிறுநரி
சிறுநரி முதுகிலே
ஒருபிடி நரைமயிர்."

"மலையிலே ஒருகல்
உருளுது புரளுது.
கடலலையிலே ஒரு கல்
உருளுது புரளுது
தத்தளிக்குது தாளம் போடுது"

இந்த விளையாட்டுகள், குழந்தைகள் வெளியே சென்று விளையாடாத சிறிய வயதில், அம்மா அல்லது வீட்டில் இருக்கும் பெரியவர்களோடு விளையாடும் விளையாட்டு!


டிக்...டிக்... யாரது?



வினா விடை!

ஒரு குழந்தை கேள்வி கேட்க மற்றொரு குழந்தை விடை சொல்லும். விடையிலிருந்து அடுத்த வினா எழும். விடைகள் எல்லாமே பொருத்தமாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால், கவிதை நடையாக அமையலாம். இயல்பாகச் சிறு குழந்தைகளுக்குத் தோன்றும் சந்தேகங்கள், வினா விடையாக அமைந்து, அறிவு வளர்ச்சிக்கு இவ்விளையாட்டு துணை செய்யும். எடுத்துக்காட்டாக -

எங்கே போனாய்? : ஊருக்குப் போனேன்



எந்த ஊர்? : கிளியூர்

என்ன கிளி? : பச்சைக் கிளி

என்ன பச்சை? : இலைப் பச்சை

என்ன இலை?: தாமரை இலை

என்ன தாமரை? : குளத் தாமரை

என்ன குளம்? : செட்டி குளம்

என்ன செட்டி? : நெய்க்காரச் செட்டி

என்ன நெய்? : பசு நெய்

என்ன பசு? : வீட்டுப் பசு

என்ன வீடு? : ஓட்டு வீடு

என்ன ஓடு? : நாட்டு ஓடு

என்ன நாடு? : இந்திய நாடு

குலை குலையாம் முந்திரிக்கா!

கொஞ்சம் வளர்ந்த குழந்தைகள் வீட்டுக்கு வெளியே சென்று நண்பர்களுடன் விளையாடுவார்கள். குழந்தைகள் வட்டமாக உட்கார்ந்து கொள்வார்கள். ஒரு குழந்தை கையில் ஒரு சிறு துண்டை வைத்துக் கொண்டு, உட்கார்ந்திருப்பவர்களைச் சுற்றி வரும். அப்போது உரையாடலாக ஒரு பாட்டுப் பாடுவார்கள்.

சுற்றி வருபவர் : குலை குலையாம் முந்திரிக்கா

உட்கார்ந்திருப்பவர்கள்: குழஞ்சு போச்சு கத்திரிக்கா...

இப்படி பாடிக் கொண்டே, சுற்றி வருபவன் வட்டமாக உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவர் பின்புறம் துணியைப் போட்டு விடுவான். யார் பின்னால் துணி இருக்கிறதோ, அவன் அதை எடுத்துக்கொண்டு, சுற்றி வந்தவனை விரட்டிப் பிடிக்க வேண்டும். அவன் ஓடி வந்து, எழுந்தவனின் இடத்தில் உட்கார்ந்து விட வேண்டும். துண்டு வைத்திருப்பவன், மீண்டும் பாடலைப் பாடியபடி சுற்றி ஓடி வர வேண்டும். தொடர்ந்து விளையாட்டு நடைபெறும். (துண்டு போட்டவன் எழுந்து ஓட வேண்டியவரின் தலையில் குட்டி விட்டு ஓடுவான். குட்டுப் பட்டவன், எழுந்து ஓடிப் பிடிப்பான்.)

பேச்சில் ஈடுபட்டு,செய்ய வேண்டிய வேலையை மறந்துவிடக் கூடாது என்பதை இந்த விளையாட்டு மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.





✱ சுபவர்ஷினி

வண்ணங்களை உணர்ந்து விளையாடல்!

இது இருவர் விளையாடும் விளையாட்டு. உரையாடலாக ஒரு பாட்டு.

டிக்... டிக்...

யாரது?

திருடன்

என்ன வேண்டும்?

நகை வேண்டும்.

என்ன நகை?

கலர் நகை

என்ன கலர்?

(ஏதாவது ஒரு கலரைச் சொல்ல வேண்டும்.) பச்சை! உடனே 2-வது சிறுவன் ஓடிப் போய், எங்கே பச்சை இருக்கிறதோ அதைத் தொட்டுவிட வேண்டும். அதை அவன் தொடுவதற்கு முன், முதலாவது சிறுவன் 2-வது சிறுவனைத் தொட்டு விட்டால், அவன் தோற்றவன். அவன் "டிக் டிக்" சொல்ல வேண்டும். விளையாட்டுத் தொடரும்.

வண்ணங்களையும் அதன் பெயர்களையும் தெரிந்து கொள்ள முடியும். அத்துடன் சுற்றுச் சூழலைக் கண்களால் அளந்து, நிறத்தை உடனடியாகக் காணவும் இந்த விளையாட்டு சொல்லித் தரும்.

கண்ணாமூச்சி!

கண்ணைக் கட்டி விளையாடும் விளையாட்டை, கண்ணாமூச்சி என்பார்கள். அதில் அக்கா அல்லது அம்மா கண்ணைப் பொத்த



லாம். கண்ணைப் பொத்திக் கொள்ள வேண்டிய குழந்தை யார் என்பதை எப்படித் தேர்ந்தெடுப்பார்கள் தெரியுமா? நகரத்துக் குழந்தைகள் 'ஷாட் பூட் திரி' போடுவது போல், விளையாட வரும் குழந்தைகளை வரிசையாக நிற்க வைத்து, ஒரு பாடல் பாடுவார்கள்.

"பச்சை தவளை பளபளங்க
பழனிப் பச்சான் மினுமினுங்க
செங்கரட்டி செவத்தப் புள்ள
கின்னன் வந்தான் கினுக்கட்டி
உடும்பு - துடுப்பு
மகா - சகா
பால் - பறங்கி
எட்மன் - துட்மன்
இல்!"

என ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு குழந்தை மேல் கை வைத்துச் சொல்ல வேண்டும். கடைசியாக 'இல்' என்ற வார்த்தை யார் மேல் முடிகிறதோ, அவள் விலகி விட வேண்டும். இப்படி ஒவ்வொருவராக விலக, கடைசியில் இருக்கும் ஒருவரே கண் பொத்திக் கொள்பவர்.

கண்ணைப் பொத்தியிருந்த சிறுவன் ஒளிந்திருப்பவர்களைத் தேடுவான். அதற்குள் ஒளிந்திருப்பவர்கள் ஓடி வந்து, கண் பொத்திய அம்மாவைத் தொட்டுவிட்டால், அவர்கள் வென்று விட்டவர்கள். ஒளிந்திருக்கும் சிறுமியைக் கண் பொத்தப்பட்ட சிறுவன் கண்டுபிடித்துத் தொட்டு விட்டால், அவள் தோற்றுவிட்டாள் என்று அர்த்தம். அவள் கண் பொத்திக்கொண்டு மற்றவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

இப்படி நிறைய விளையாட்டுகள் கிராமப்புறங்களில் விளையாடப்படுகின்றன. உடலுக்கும் மனத்துக்கும் தெம்பு தரும் இந்த ஆட்டங்களை நீங்களும் விளையாடி மகிழலாமே! ○

எத்தனை வித்தியாசங்கள்?

குட்டீஸ் கோகுலம்

இரண்டு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. குருவியின் வாயில் இலை 2. பனித்துளிகள் 3.மான் குட்டியின் கால்சட்டை 4. கல் 5.பாம்பின் கண்கள்

வணக்கம் குழந்தைகளே!

கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரும் உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில் உறுப்பினர்களின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இதே இதழின் வேறு பக்கத்தில் கூப்பன் வெளியாகியுள்ளது. இதுவரை சேராதவர்கள் கூப்பனை அனுப்பலாம். அடுத்த இதழிலும் பட்டியல் வெளியாகும்.

அனைவருக்கும்
நன்றி!

அன்புடன்
ஆசிரியர்

கோகுலம்
சிறுவர் சங்கம்!

101) எஸ்.கே.அபிஷேக், ஆறாம் வகுப்பு, ஜவகர் பள்ளி, நெய்வேலி.

102) எஸ்.கே.ஸ்ரீவித்யா, நான்காம் வகுப்பு, ஜவகர் பள்ளி, நெய்வேலி.

103) ச.துசிகரன், எட்டாம் வகுப்பு, புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.

104) இரா.சிவரஞ்சனி, பதினொராம் வகுப்பு, எஸ்.ஆர்.எம்.பெண்கள் மேனிலைப் பள்ளி, வல்லம்.

105) பா.கைலாஷ், எட்டாம் வகுப்பு, கிங் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்.

106) மு.மஞ்சுளா, பத்தாம் வகுப்பு, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, மணல்மேடு.

107) அ.விக்ரம், ஒன்பதாம் வகுப்பு, அ.அ.அ.மேனிலைப் பள்ளி, அதியமான்கோட்டை.

108) எஸ்.பூர்ணவல்லி, பதினொராம் வகுப்பு, விவேகானந்தா மேனிலைப்பள்ளி, கோவை.

109) ஆர்.தியாகராஜ், ஒன்பதாம் வகுபபு, அரசு உயர்நிலைப் பள்ளி, கோவை.

110) அ.அனுசுயா, இரண்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, திருப்புலிவனம்.

111) மு. சோமேஷ்வர், எட்டாம் வகுப்பு, அமிர்த



வித்யாலயம், நல்லாம்பாளையம்.

112) செ.சங்கவை, நான்காம் வகுப்பு, மேரிஆன் மெட்ரிகுலேஷன் பள்ளி, மதுரை.

113) எஸ்.ரஞ்சித்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, நன்னுவக்காடு (கேரளா)

114) எஸ்.கௌசல்யா, ஆறாம் வகுப்பு, அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, மொடக்குறிச்சி.

115) எஸ்.இளமாறன், நான்காம் வகுப்பு, விவேகானந்தா பி.சுயா, சிலாங்கூர், மலேசியா.


116) தி.அக்ஷிதா, ஒன்பதாம் வகுப்பு, புனித வளனார் பெண்கள் மேனிலைப் பள்ளி, திருச்சி.

117) எஸ்.ராகுல், நான்காம் வகுப்பு, புனித தெரசா மெட்ரிக் பள்ளி, கரூர்.

118) கோ.சுசீல்வாசன், ஏழாம் வகுப்பு, டி.ஏ.வி.சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை.

119) யாமினி அன்புமணி, எட்டாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

120) அதிபன் அன்புமணி, நான்காம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.



121) மம்தா மணிமாறன், மூன்றாம் வகுப்பு, பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி, வடக்கன்குளம்.

122) மு.சந்தோஷ்குமார், பத்தாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, பூளவாடி.

123) பா.கீர்த்தனா, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சில்வர் ஜூப்ளி பள்ளி, திருநெல்வேலி.



124) அழ.மணிகண்டன், பத்தாம் வகுப்பு, பாரதிய வித்யா பவன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கோவை.

125) கோ.மா.கிருஷ்ணபிரியா, ஒன்பதாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா தேசிய மேனிலைப் பள்ளி, சென்னை.

126) த.அழகு சிவராஜ், நான்காம் வகுப்பு, கே.எம்.கே.ஏ.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருத்தங்கல்.

127) கி.கவிதா, ஏழாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, ஆர்க்காடு.

128) எஸ்.ரஜினி சீனிவாசன், பதினோராம் வகுப்பு, அரசினர் மேனிலைப் பள்ளி, கருங்குழி.

129) ச.ஜீமானாஹசீன், எட்டாம் வகுப்பு, நேஷனல் அகாடமி பள்ளி, பட்டினம்காத்தன்.

130) கே.சந்தோஷ்குமார், நான்காம் வகுப்பு, பாரதிதாசனார்

மெட்ரிக் மேனிலைப் பள்ளி, அரக்கோணம்.

131) ஆர்.எஸ்.சிபிசூரியன், முதலாம் வகுப்பு, வித்யா நிகேதன் மெட்ரிகுலேஷன் பள்ளி, இராசிபுரம்.

132) எஸ்.வினுபார்கவி, ஏழாம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யாலயா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, அந்தியூர்.

133) கோ.திவ்யா, எல்.கே.ஜி, ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி, பம்மல்.

134) கோ.அக்ஷயா, ஆறாம் வகுப்பு, ஸ்ரீசங்கர வித்யாலயா மேனிலைப்பள்ளி, பம்மல்.



135) எல்.ஸ்ரீநிவாஸ், ஐந்தாம் வகுப்பு, கிரீன் பார்க் மெட்ரிக் பள்ளி, ஆத்தூர்.

136) கு.கிருஷ்ணகுமார், பத்தாம் வகுப்பு, மேரிஆன் பள்ளி, மதுரை.

137) செ.கஸ்தூரி, மூன்றாம் வகுப்பு, தி ஆஸ்ரமம் பள்ளி, சென்னை.

138) எம்.என்.சிராஜ்மொஹமது, பத்தாம் வகுப்பு, ஜகீரா கல்லூரி, இலங்கை.

139) செ.சதாசிவம், எட்டாம் வகுப்பு, டி.ஏ.வி.பள்ளி, சென்னை

140) ந.இந்துமதி, ஐந்தாம் வகுப்பு, கன்னியாகுமரி பப்ளிக் பள்ளி, பஞ்சலிங்கபுரம்.

141) கு.ராகுல், எட்டாம் வகுப்பு, ஸ்ரீமதி சுந்தரவல்லி நினைவுப்பள்ளி, குரோம்பேட்டை

142) மு.சுஷ்மா சுனிதா, எட்டாம் வகுப்பு, புனித அன்னாள் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி.

143) ச.இராஜலெட்சுமி, எட்டாம் வகுப்பு, புனித கபிரியேல் பெண்கள் மேனிலைப்பள்ளி,பசுபதிகோவில்.

144) ச.அஜய், ஒன்பதாம் வகுப்பு, கிரீன்பார்க் மெட்ரிக் பள்ளி, எருமைப்பட்டி.

145) சு.கு.ஜனனி, ஆறாம் வகுப்பு, பி.எஸ்.சிதம்பர நாடார் பள்ளி, விருதுநகர்.

146) கே.எஸ்.யோகேஷ்வரன், ஆறாம் வகுப்பு, ராக்போர்ட் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருச்சி.

147) அ.பவித்ராலட்சுமி, பத்தாம் வகுப்பு, சிறுமலர் மடம் பெண்கள் மேனிலைப்பள்ளி, திருச்சி.

148) சி.ராஜ்குமார், ஏழாம் வகுப்பு, தி லீடர்ஸ் மெட்ரிக் நிறைநிலைப் பள்ளி, காரைக்குடி.

149) க.சுவர்ணஸ்ரீ, இரண்டாம் வகுப்பு, செயிண்ட் ஜோசப் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, சென்னை.

150) ப.வைகுந்த், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீசங்கர வித்யாலயா பிரைமரி பள்ளி, பம்மல்.



சூப்பர்



அ.நிவேதா,
2-ஆம் வகுப்பு,
ஜவகர் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
நெய்வேலி

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற
அகந்தையை விடுங்கள்.
அவமதிப்புகளை, நிலைகுலைவுகளை ஆசைப்படாதீர்கள்.
மற்றவர்களுக்குரிய மதிப்பை காட்டவும், இனிய
இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
புன்முறுவல் காட்டவும் தீமைக்கு அன்புச் சொற்களை
சொல்லவும் கூட தோல்வியடைந்தது போல் நடந்து
கொள்ளாதீர்கள்.



ர.அக்ஷை,
5-ஆம் வகுப்பு,
பத்மா சேஷாத்ரி பள்ளி,
சென்னை

காந்தி அடிகள்

காந்தி அடிகள் காலத்தின் சின்னம். ஓர்
எழுச்சியின் அடையாளம். ஒரு மறுமலர்ச்சியின்
சின்னம். அரசியல் துறையில் காந்தி அடிகள்
காட்டிய சாதனைகள் தாம் அவருடைய
அறப்போரின் மாண்பினை வியந்து பாராட்டும்
வண்ணம் அமைந்துள்ளது. சமூகத்தின் மேம்பாடும்
அவருடைய குறிக்கோளாக இருந்தன.

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை
பூஜை செய்ய உதவுதே

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தை காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி அணிய உதவுதே



கோ.சே.நந்தினி,
6-ஆம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர்
மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, சேலம்

கையெழுத்து!



ரா.வெங்கடேஷ்,
3-ஆம் வகுப்பு,
செயின்ட் ஜோசப்
மெட்ரிக் பள்ளி,
குடவாசல்

ஒரு நல்ல புத்தகத்தை அழிப்பதும் ஒரு
மனிதனையே கொல்வதற்கு ஒப்பாகும்
யோசனை இல்லாமல் பேசுவது
குறி யில்லாமல் சுடுவது போல்.

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா

எஸ்.என். சிந்துஜா,
முதல் வகுப்பு,
கிரீன்பீல்டு பள்ளி,
வத்திராயிருப்பு





கே.ஆர்.நவநீத கிருஷ்ணன்,
7-ஆம் வகுப்பு,
இராமகிருஷ்ண வித்யாலயா
மெட்ரிக் மே.நி.பள்ளி, விழுப்புரம்

எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும்.
சோம்பல் உள்ளவர் தேம்பித் திரிவர்.
உன் கையே உனக்கு உதவி.
நன்றி மறவேல்.
வைகறை துயிலெழு
சனி நீராடு.

கதை: ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்



தமிழ் வடிவம்: ராதிகா ரகு




இவங்களை எப்படிச் சாப்பிடறது? ஆவ்!
தூக்கம் வருதா செல்லம்...
ஆமா! கண்ணு சொக்குது...
இந்த மரப் பெட்டியில படுத்துக்க. சுகமா இருக்கும்
தூங்கி எழுந்ததும் ரெண்டு பேரையும் சாப்பிட லாம்.
புலி படுத்ததும் காமாட்சி சட்டென பெட்டியை மூடி பூட்டினாள்.
மாட்டினியா முட்டாளே!
கிர்ர்...கிர்ர்...
காமாட்சி என்ன செய்யறே?
பாவம் பூனை! பெட்டி யைத் திற..
அது பூனை யில்லே...
...காட்டுப் புலி!
புலியா? ஆ! சாமி!



வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்தை உங்கள்
கைவண்ணத்தால் அழகுபடுத்துங்கள்





அவார்டு நாயகன் மாத்யூ!

பாத் நகரில் பிறந்த 'மாத்யூ கிரிஸ்டோபருக்கு விளையாட்டுதான் வாழ்க்கை என்கிற அளவுக்கு ஆர்வம் உண்டாகியிருந்தது.1917-ஆம் ஆண்டு பிறந்த மாத்யூ (Mat) என்றே அழைக்கப்பட்டார். உலகளவில் மேட் என்கிற பெயர்தான் பிரசித்தமாயிற்று. பள்ளி நாட்களில் எங்கு விளையாட்டுப் போட்டிகள் நடந்தாலும் உடனே அங்கு ஆஜராகி விடுவார். சிறுவயது முதலே பேஸ்பால், பாஸ்கட் பால், ஃபுட்பால், என்று பல விளையாட்டுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும், பேஸ்பால் மட்டுமே அவருக்குப் பிடித்த விளையாட்டாக இருந்தது.

பதினான்கு வயதிலேயே விளையாட்டு விமர்சனங்களை எழுதத் தொடங்கினார்.

படிப்பு நேரம் போக பாக்கி நேரங்களில் புத்தகங்களை விற்பனை செய்து வந்தார். புத்தகங்கள், தினசரிகளில் வரும் 'ஸ்போர்ட்ஸ்' பகுதிகளைப் படிப்பதே அவரது பொழுதுபோக்காக இருந்தது. படிப்பதோடு விளையாட்டுகளிலும் பங்கேற்றுக் கொண்டதால் அதன் நெளிவு சுழிவுகளை அலசி ஆராய முடிந்தது.

அவர் குழந்தைகளுக்காக எழுதிய



மாலதி சந்திரசேகரன்

முதல் புத்தகம் 'தி லக்கி பேஸ்பால் பேட்' (The Lucky Baseball Bat) அவருக்கு முதலில் அவார்டு பெற்றுத் தந்த புத்தகம் 'பாஸ்கட் பால் ஸ்பார்க் பிளக்' (Basket Ball Spark Plug) என்பதாகும்.

கிரிஸ்டோபர் 275 சிறுகதைகள் (விளையாட்டுச் சம்பந்தப்பட்டவை) எழுதியிருக்கிறார். அதைத் தவிர, 'டேர்ட் பைக் ரேசர்' (Dirt Bike Racer) என்கிற புத்தகத்திற்கு மினிசோட்டா மாகாணத்தில் அவார்டு பெற்றார். ஸ்போர்ட்ஸ் புத்தகங்கள் எழுதியதற்காக 'மில்னர்' அவார்டும் கிடைத்தது.



சங்கீதத்தில் ஆர்வம் கொண்ட அவருக்கு சங்கீதம் கேட்டுக் கொண்டே தம்மை விளையாட்டுக்களில் ஈடுபடுத்திக் கொள்வது பிடித்திருந்தது. பெண்களுக்காகவும் புத்தகம் எழுதினார். 'தி ஸ்பை ஆன் தேர்ட் பேஸ்', 'தி பிரஷர் ப்ளே' ஆகிய நூல்கள் பெயர் வாங்கிக் கொடுத்தன.

நாளடைவில் விளையாட்டுக்களை மையமாக வைத்து மர்மக் கதைகளை எழுதத் தொடங்கியவருக்கு 'மேட்' என்றால் மர்மக் கதை படைப்பாளி என்கிற முத்திரை பதிந்தது.

எல்லோரையும் சந்தோஷத்திலும் திருப்தியிலும் ஆழ்த்திய 'மேட்' 1997-ல் சார்லெட் மாகாணத்தில் காலமானார். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் மகிழ்வித்தவர், தம்முடைய எழுத்து, தம் வாரிசுகளால் படிக்கப்படவில்லையே என்று இறுதிவரை வருந்தினார்!



ஆச்சி!

- ரா.கலைச்செல்வி



ஆச்சி எங்கள் ஆச்சி
அன்பு முத்தம் தருவாள்
பாய்ச்சும் முத்தம் தன்னில்
பாசம் முந்தி நிற்கும்!

செல்வி என்றே அழைப்பாள்
செல்லம் கொஞ்சி மகிழ்வாள்
நல்ல வார்த்தை பேசி
நயமாய் திருத்தும் ஆச்சி!

கதைகள் பலவே கூறி
கருத்தில் அறிவைச் சேர்த்தே
புதையல் போன்றே தருவாள்
பொறுப்பு மிக்க ஆச்சி!

இரவு படுக்கும் போதும்
இனிய அணைப்பில் துயில
பாட்டு பாடும் ஆச்சி
பாசம் பொங்கும் ஆச்சி!

பம்பரம்!

சின்னச் சின்ன பிள்ளைகள்
சேர்ந்து விளை யாடவே,
வண்ண வண்ண பம்பரம்
வாங்கி வந்தோம் கடையிலே!





வெல்லுங்கள்!

திட்ட மிட்டு ஒழுங்குக்குள்
கட்டுப் பட்டுப் பயில்பவர்
பட்டம் பெற்று வெல்லுவார்
எட்டுத் திக்கும் செல்லுவார்

பந்தை வீசும் ஆட்டத்தில்,
பாடல், ஆடல், ஓட்டத்தில்
பந்த யத்தில் முந்தலாம்
பயிற்சி மூலம் வெல்லலாம்!

வேலைக் கான தேர்விலும்
வினாக்கள் எழுப்பும் வேளையில்
நூலில் பெற்ற அறிவினால்
நூறு மதிப்பெண் வாங்கலாம்!

வென்று விருது பெற்றபின்
வேண்டும் பணிவு, இல்லையேல்
நின்று நிலைப்ப தில்லையே
நீங்கள் காணும் வெற்றிகள்!


– சி.விநாயகமூர்த்தி

சுற்றிக் கயிறை இழுக்கவும்
சுழன்று சுழன்று ஆடுது!
தப்பி வந்த கிரகமாய்த்
தரையில் கோலம் போடுது!

பள்ளம் பறித்துத் தரையிலே
பக்குவமாய் ஆடுது!
உள்ளம் கொள்ளை போகுது
ஊரும் கூடி ரசிக்குது!

அண்ணன் உள்ளங் கையிலே
ஆடிவரும் பம்பரம்!
எந்தன் கையில் இறங்கியே
இன்னும் மகிழ்ச்சி தந்திடும்!

– நெல்லை கவிதாசன்



ஐயான் ஃபிளமிங்



உலகெங்கும் உள்ள சினிமா ரசிகர்களின் உள்ளம் கவர்ந்த கதாபாத்திரம் ஜேம்ஸ் பாண்ட். அந்தப் பெயர் உருவானதே ஒரு சுவாரஸ்யம். 1951-ஆம் ஆண்டு, 'ஐயான் ஃபிளமிங்' என்ற எழுத்தாளர் ஒரு கற்பனைக் கதாநாயகனை உருவாக்கி உலவ விட நினைத்தார். அவரது ஆவலுக்கு இசைந்த வகையில் பெயர் ஒன்றைத் தேடும் பணியில் ஈடுபட்டார். அது ஆண்மை நிறைந்ததாய் இருக்க வேண்டுமென எண்ணினார்.

'மேற்கிந்திய நாட்டுப் பறவைகள்' (Birds of the West Indies) என்ற நூலை ஐயான் ஃபிளமிங் ரசித்துப் படித்துக் கொண்டிருந்தபோது இந்தப் பெயர் கிடைத்தது. அந்த நூலை எழுதியவரின் பெயரான 'ஜேம்ஸ் பாண்ட்' என்பதே கதாநாயகனின் பெயராகவும் ஆயிற்று.

மிக விரைவில் அமெரிக்கா முழுவதும் மிகப் பிரபலமான பெயராக ஜேம்ஸ் பாண்ட் மாறியது. அமெரிக்க நாட்டு ஜனாதிபதியே 'என் விருப்பதற்திற்குரிய கதாநாயகன் ஜேம்ஸ் பாண்ட்' என கூறுமளவிற்குப் பெயர் பரவியது.

ஜேம்ஸ் பாண்ட் என்கிற பெயரில் இருந்த அந்த பறவை

பாண்ட்...



ப.இனியன்

ஆராய்ச்சியாளர், தமது நூல் பற்றிய விமரிசனத்தைப் படிக்க, சண்டே டைம்ஸைப் புரட்டியபோதுதான் தம் பெயரில் ஒரு கதாநாயகன் இருப்பது தெரிய வந்தது. தம் பெயரில் ஒரு கதாநாயகன் கையில் துப்பாக்கி ஏந்தி, கன்னியரைக் கவர்ந்திழுக்கும் பாத்திரமாக இருப்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மிகவும் வருத்தமுற்றார்.





ஜேம்ஸ் பாண்ட்!

திருமதி ஜேம்ஸ் பாண்ட் ஐயான் ஃபிளமிங்கின் மீது நஷ்ட ஈடு வழங்க வழக்குத் தொடரப் போவதாக கடிதம் எழுதினார். கடிதத்தைப் படித்த ஐயான் ஃபிளமிங் மிக வருத்தமுற்று மன்னிப்புக் கேட்டுப் பதில் கடிதம் எழுதினார்.

''எதிர்காலத்தில் மிக மோசமான பறவையினம் ஒன்றை நீங்கள் கண்டு பிடிக்க நேரிடலாம். அப்போது அதற்கு எனது பெயரான ஐயான் ஃபிளமிங் என்பதை வைத்து விடுங்கள்'' என்று கடிதத்தில் குறிப்பிட்டார்.

ஃபிளமிங்கின் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு மேல் நடவடிக்கை எதிலும் ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் பாண்ட் ஈடுபடவில்லை. ஆனாலும் கதாநாயகன் ஜேம்ஸ் பாண்டால் ஆராய்ச்சியாளருக்குப் பல சிக்கல்கள் வந்தன. மற்ற நாடுகளுக்குச் செல்ல நேர்ந்தால் கஸ்டம்ஸ் அதிகாரிகள் அவர் பெயரைக் கேட்டதும் அதிகமாக சோதனையிட்டு, தொல்லைப்படுத்தினர்.

இருந்தபோதும் ஹோட்டல்களில் ஜேம்ஸ்பாண்ட் என்ற பெயரால் விசேஷ கவனிப்புக் கிடைத்ததை நினைத்து மகிழ்ந்தார். ஆனால் திருமதி ஜேம்ஸ் பாண்டின் பாடுதான் திண்டாட்டமாயிற்று. திருமதி ஜேம்ஸ் பாண்ட் என்று தம்மை அறிமுகம் செய்துகொண்டபோதெல்லாம் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். காரணம், கதாநாயகன் ஜேம்ஸ் பாண்டிற்கு மனைவியே கிடையாது! ○

ஹலோ வாசகர்களே...



வணக்கம்!

இந்த இதழில் இரண்டு புதுமைகளை அளிக்கின்றோம். ஒன்று, எதிர்ப்பக்கமுள்ள **'கோகுலம் காமிக்ஸ்'** போட்டோக்களை வைத்து உருவாக்கப்பட்ட படக்கதை!

அடுத்தது **'மினி கோகுலம்'**

37-ஆம் பக்கத்தில் தொடங்கி 44-ஆம் பக்கம் வரை மொத்தம் எட்டுப் பக்கங்கள் உள்ளன. அந்தப் பக்கங்களைத் தனியே எடுத்து இரண்டாக மடக்கி கத்தரிக்கவும். இப்போது அது பதினாறு துண்டு களாகிவிடும். அதாவது 37-ஆம் பக்கத்தின் கீழ் பகுதி மினி கோகு லத்தின் முதல் பக்கமாகவும், மேல் பகுதி பதினாறாவது பக்கமாகவும் மாறி விடும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து, இடது பக்கத்தின் மூலையில் ஸ்டேப்ளரைக் கொண்டு பின் செய்து விடவும்.

கைக்கு அடக்கமாய், சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் வகையில் 'மினி கோகுலம்' தயாராகிவிடும். இந்த மினி கோகுலத்தில் ஒவ்வொரு மாதமும் சுவையான தகவல்கள் வெளியாகும். உங்களின் பொது அறிவுக்கு விருந்தாய் அமையப் போகும் மினி கோகுலத்தை பாதுகாத்து வைக்கலாம். சரிதானே?

இந்த இரண்டு புதுமைகளைக் குறித்து உங்களின் கருத்துகளை ஆவ லுடன் எதிர்பார்க்கிறோம்!



நான்தான் ராஜா!



கதை : யுவராஜ் ✧ வடிவமைப்பு : ச. கார்த்திகேயன்



மற்ற விலங்குகள் சுப்புவைக் கிண்டல் செய்துகொண்டே இருக்கும்.


இந்தக் காட்டை விட்டே போய்டுவோம். இந்த அனாதையை யார் தேடப் போறாங்க...
சே! என்னை எல்லோரும் கிண்டல் பண்றாங்க! ஏன்தான் இப்படி பிறந்தேனோ?
பார்த்து மெதுவா போடா! புல் தடுக்கி விழுந்துடப் போறே ஹி.. ஹி.. ஹி..
சோனிப் பயல் ஓடறான் பாரு!
கப்பு நீண்ட தூரம் நடந்து, காட்டில் யாருமில்லாத ஓரிடத்தை அடைந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது.
இங்கே யாரும் காணுமே! சாப்பிட எதுவும் கிடைக்காதோ? அட, அங்கே என்ன கிழங்குகள் மாதிரி...


அவற்றைச் சாப்பிட்டு விட்டு சப்பு படுத்துக் கொண்டது.
சுவையாதான் இருந்தது. ஆனா வயிற்றை என்னவோ செய்யுதே! இப்படி படுத்துக்குவோம். கண்ணு சொக்குது. தூக்கமா வருது!


காலையில் கண்விழித்த சப்புவுக்கு அதிர்ச்சியும் வியப்பும் காத்திருந்தது. ஆம்! 'சோனி சப்பு' ஐம்பதடி உயரத்தில் சூஜா' ஜுபாகுவாய் மாறியிருந்தது.
கடவுளே இது உன்னோட மகிமைதானா? நன்றி! இனிமே என்னை யாரும் சோனின்னு சொல்ல முடியா

பண்டிகையோ பண்டிகை!

அடுத்த மினி கோகுலம்



இங்கே மடித்து கத்தரிக்கவும்

இங்கே பின் செய்யவும்

மினி


கோகுலம்

தொகுப்பு:
ச.ந.கண்ணன்



துளிகள்!

அத்லெடிக்ஸ்!




ஓசாகாவில் சமீபத்தில் நடைபெற்ற உலக அளவிலான அத்லெடிக் போட்டியில் அனைவர் கவனத்தையும் ஈர்த்தது 100மீ ஓட்டப்பந்தயம்தான். இதில் 9.77 விநாடிகள் ஓடி, உலக சாதனை படைத்திருந்த 'அசஃபா பவல்' என்கிற ஜமைக்கா வீரரை 'டைசன் கே'(அமெரிக்கா) தோற்கடித்தார். டைசன் 9.85 விநாடிகளிலும் பவல் 9.96 விநாடிகளிலும் தூரத்தைக் கடந்தனர். அடுத்த வருடம் பீஜிங்கில் ஒலிம்பிக்ஸ் நடக்கப் போகிறது. கடுமையான போட்டியை எதிர்பார்க்கலாம்!

கிரிக்கெட்!



பி.சி.சி.ஐ என்கிற இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.). இதற்கு மூல காரணமாக இருந்த அதன் தலைவர் சுபாஷ் சந்திரா சொன்னது இதுதான் ''ஐம்பது வருடங்களுக்கு முன்னால் ஹிந்தி சினிமாவில் ஐந்து பாடகர்கள் மட்டுமே இருந்தனர். ஜீ டீவியில் சரிகம என்கிற பாட்டுப் போட்டி நடத்திய பிறகு ஹிந்தி சினிமாவில் ஐம்பது பாடகர்கள் உருவானார்கள். அதுபோல இந்தியாவுக்கு ஐம்பது டெண்டுல்கர்களைப் படைப்பதுதான் ஐ.சி.எல்லின் நோக்கம்.''

புட் பால்!



உலகின் நெ.1 கால்பந்து வீரரான ரொனால்டோ தமது எடையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். '94 மற்றும் 2002 உலகக் கோப்பைகளை பிரேசிலுக்கு வென்று தந்ததில் இவரது பங்களிப்பு மிகவும் அதிகம். சென்ற வருடம் நடந்த உலகக் கோப்பையின்போது நிறைய பேர், அதாவது பிரேசில் பிரதமர் உட்பட இவரது உருவத்தைக் கிண்டல் செய்தார்கள். சமீபத்தில் கடுமையான பயிற்சிகள் மூலமாக ஆறு கிலோ எடை குறைத்திருக்கிறார் இவர்.

ஹாக்கி!




'சக் தே இந்தியா' என்கிற ஹிந்திப் படம் பெண்கள் ஹாக்கியை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டது. இந்தப் படத்தின் வெற்றிக்குப் பிறகு நிறையப் பெண்கள் ஹாக்கி விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார்களாம். சானியா மிர்சா வரவுக்குப் பிறகு இந்தியாவில், பெண்கள் டென்னிசில் நிறைய மாற்றம் ஏற்பட்டது. அதுபோன்ற ஒரு மேஜிக்கைத்தான் சக் தே இந்தியா படம் செய்திருக்கிறது.

பாக்ஸிங்!

பாக்ஸிங் விளையாட்டில் இரண்டு வகைகள் உண்டு. புரொபஷனல் மற்றும் அமெச்சூர்! ஒலிம்பிக், ஏசியன் கேம்ஸ் போன்ற போட்டிகளில் நாம் பார்ப்பது அமெச்சூர் பாக்ஸிங். இந்த வகை குத்துச் சண்டையில் வீரர்கள் தலைக்குக் கவசம் அணிந்திருப்பார்கள். இரண்டு நிமிடங்கள் கொண்ட நான்கு சுற்றுகளில் முடிவுகள் நிர்ணயிக்கப்படும். ஆனால் புரொபஷனல் பாக்ஸிங் பன்னிரண்டு சுற்றுகள் கொண்டது. தலைக்கவசம் அணியக்கூடாது. முகமது அலி, மைக் டைசன், ஹோலிபீல்டு போன்றவர்கள் இந்த வகை பாக்ஸிங்கில் புகழ் பெற்றவர்கள்.




போலோ!



குதிரை மீதேறி பந்தை விரட்டும் 'போலோ' என்கிற விளையாட்டு, உலகம் முழுக்க பிரசித்தி பெற்றது. இந்த விளையாட்டு தோன்றிய இடம் மணிப்பூர். 'சகோல் கஞ்ஜி' என்கிற புராதன விளையாட்டைத்தான் ஆங்கிலேயர்கள் போலோ என்று பெயரிட்டு விட்டார்கள். இது ஒரு காலத்தில் அரசர்களின் முக்கிய விளையாட்டாக இருந்தது.

கூடைப் பந்து!

கூடைப் பந்து விளையாட்டு இன்று அமெரிக்காவில் மிகவும் பிரபலமாக இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு பள்ளியும் இன்று ஒரு கூடைப் பந்து அணியை உருவாக்கியுள்ளது. சென்ற வருடம் மட்டும் அமெரிக்காவில் பள்ளிகளுக்கு இடையே நடைபெற்ற தேசிய கூடைப் பந்து போட்டியில் பத்து லட்சம் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை நிரூபித்துள்ளனர்! பொதுவாக அமெரிக்காவில் கூடைப் பந்து ஆடுபவர்களின் சராசரி உயரம் ஆறு அடி மூன்று அங்குலம்!




டென்னிஸ்!



சானியா மிர்சா கடந்த சில மாதங்களாக நிறைய ஜெயித்து வருகிறார். இதன் பயனாக அவர் உலகின் சிறந்த முப்பது வீரர்கள் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார். இருபத்தெட்டாவது ரேங்க் வரைக்கும் வந்துள்ள சானியா, 'எப்படியும் நான் டாப் 10ல் இடம் பிடிப்பேன்' என்கிறார். சரி சானியா, எப்போ பர்ஸ்ட் ரேங்க் வாங்கப் போறீங்க?

நீச்சல்!

நீச்சல் பற்றிய புத்தகம் முதல்முறையாக 1538 ஆம் வருடம் வெளிவந்தது. அதன்பிறகு 19ஆம் நூற்றாண்டில் நீச்சல் என்பது ஒரு விளையாட்டுப் போட்டியாக உருமாறியது. ஸ்வீடன், டென்மார்க், நார்வே, பின்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளில் பள்ளிக் குழந்தைகள், ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயமாக நீச்சல் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு விதிமுறை உண்டு. இங்கிலாந்தில் பதினொரு வயது வரைக்கும் நீச்சல் கற்றுக் கொள்ளாமல் இருக்கும் மாணவர்களுக்கு, தனியே சிறப்புப் பயிற்சிகள் அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன!



ஒலிம்பிக்!



இன்றுவரையில் 193 நாடுகள் மட்டுமே ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் ஒலிம்பிக் போட்டியில் 203 நாடுகள் பங்கெடுக்கின்றன. எப்படி? ஒலிம்பிக் அமைப்பு, தகுதியை மட்டுமே அளவுகோலாக வைத்து வருகிறது. அதனாலேயே புர்டோ ரிக்கா (அமெரிக்கா), பெர்முடா (இங்கிலாந்து), ஹாங் காங் (சைனா) போன்ற நகரங்கள், மற்ற நாடுகளோடு இணைந்து விட்டாலும் அவை ஒலிம்பிக்கில் தனி நாடாகவே போட்டியிடுகின்றன.

நேஷனல் கேம்ஸ்!

வட இந்திய மாநிலமான மணிப்பூர் மிகவும் பின்தங்கிய மாநிலமாக இருப்பினும் விளையாட்டுப் போட்டியில் அவர்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்கள். இந்த வருடம் அஸ்ஸாமில் நடந்த நேஷனல் கேம்ஸில் 51 தங்கங்கள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது. (தமிழ்நாடு பத்து தங்கப் பதக்கங்களை வென்றது). மணிப்பூர் இன்று தன்னுடைய சிறப்புத் தகுதியாகக் கருதுவது விளையாட்டுத் திறமையைத் தான்!



சைக்கிளிங்!



சைக்கிளிங் என்கிற விளையாட்டு இந்தியாவில் அவ்வளவு புகழடையாவிட்டாலும் மேலை நாடுகளில் பரவலாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விளையாட்டு. சைக்கிளிங் செய்வதால் உடலுக்கு நிறைய நன்மைகள். குறிப்பாக, உடல் எடையைக் குறைக்க இது ஒரு வலுவான பயிற்சி என்கிறது உலக சுகாதார அமைப்பு.

செஸ்!




விஸ்வநாதன் ஆனந்த் டிசம்பர் 11ஆம் தேதி பிறந்தவர். அவருக்கு இப்போது வயது 37. இன்றைய உலகின் நெ. 1 செஸ் வீரராக இருக்கும் இவர் அர்ஜீனா விருது, பத்மஸ்ரீ விருது, ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது, பத்ம பூஷன் விருது போன்ற நாட்டின் எல்லா உயரிய விருதுகளை யும் பெற்றிருக்கிறார். சசிகிரண் மற்றும் ஹரிகிருஷ்ணா ஆகிய இரு வீரர்களை, 'நாளைய ஆனந்த்கள்' என்று குறிப்பிடுகிறார் இவர்!

பில்லியர்ட்ஸ்!

செஸ் இந்தியாவில் பிரபலமாவதற்கு ஆனந்த் காரணம் என்றால் பில்லியர்ட்ஸின் அறிமுகத்துக்கு 'கீத் சேத்தி' மிகவும் முக்கியமானவர். இதுவரைக்கும் எட்டு உலக அளவிலான கோப்பைகளை வென்றிருக்கிறார், பில்லியர்ட்ஸ் விளையாட்டு என்பது ஒரு பணக்கார விளையாட்டு என்பதால் இது கிராமங்கள் வரைக்கும் செல்லாமல் இருக்கிறது. இதை மாற்றுவதற்காக 'கோல்ட்கோஸ்ட்' என்கிற பில்லியர்ட்ஸ் அமைப்பை உருவாக்கி, வளரும் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறார் கீத் சேத்தி.



36-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...




யானை கஜபதியும்...
காப்பாத்துங்க! சுப்பு என்னை விரட்டிட்டு வர்றான்!
கஜபதியே கதிகலங்கி ஓடறார், நாம எல்லாம் சுண்டைக்காய்!
சுப்புவின் நண்பன் பாலு...
சுப்பு ஏன் இப்படி நடந்துக்கறே? கடவுள் கொடுத்த இந்த பலத்தை நல்லதுக்கு பயன்படுத்து
முடியாது! என்னை அவமதிச்சவங்களைப் பழி வாங்கியே தீருவேன்!
பழி உணர்ச்சி தப்பு. மன்னிக்கறதுதான் நல்ல பண்பாடு!
உன் புத்திமதி தேவையில்லை, போய்டு! இல்லே, நசுக்கிடுவேன்.



பிரச்னை பெரிதாக, சிங்கராஜா...
இனியும் பொறுமையா இருக்கறதில் அர்த்தமில்லே சுப்புவுக்குப் பாடம் புகட்டுவோம்.
சுப்பு நான் சொல்றதைக் கேளு.
வா கண்ணா வா! நாம மோதிப் பார்த்து யார் ராஜான்னு முடிவு பண்ணுவோம்.
இனி பேசிப் பயனில்லை...
சிங்கராஜாவின் கம்பீர கர்ஜனை...
கிர்ர்ர்... வாடா!
சுப்பு தொலைஞ்சான்!


கப்புவும் தயாரானது.
இப்ப பாரு என்னோட கர்ஜனையை! உர்ர்ர்...
கடுமையான சண்டையின் முடிவில் கப்பு சுருண்டு விழுந்தது.
ரா..ராஜா வேணாம் வி..விட்டுடுங்க!
உருவத்தால மட்டும் பலசாலியானா போதாது. உள்ளத்தாலும் பலசாலியா இருக்கணும். அவன்தான் ராஜா!
என்னை மன்னிச்சுடுங்க! என்னோட இந்தப் புதிய பலத்தை இனிமே நல்லதுக்கு மட்டுமே பயன்படுத்துவேன்.
முற்றும்

டாக்டர் கு.கணேசன்

உடலினை உறுதி செய்!

விளையாட்டு என்பது நம் ஆரோக்கியம் காக்க உதவுகின்ற உடற்பயிற்சி. ஏதோ விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமே இது உரித்தானது என்று நினைப்பது தவறு. மனிதராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகின்ற தனிப்பயிற்சி இது. உணவுக்கு அடுத்தபடியாக நம் ஆரோக்கியம் காப்பதில் முக்கிய பங்கு வகிப்பது உடற்பயிற்சிகளே!

'ஓடி விளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!' என்று 'பாப்பா பாட்டி'லும் 'உடலினை உறுதி செய்' என்று புதிய ஆத்திச்சூடி'யிலும் பாரதியார் சொல்லியிருப்பதை அறிவீர்கள்!

உடற்பயிற்சிகளை ஏன் செய்ய வேண்டும்?

ஒரு சைக்கிளை வாங்குகிறீர்கள். அதை ஓட்டாமல் வீட்டிலேயே வைத்துக்கொண்டால் என்ன ஆகும்? நாளாக ஆக சைக்கிள் துருப்பிடித்து, கிரீச், கிரீச் என்று சத்தம் போடும். அதேநேரத்தில் அந்தச் சைக்கிளை தினமும் துடைத்து எண்ணெய் போட்டு சாலையில் ஓட்டினால்...? அது போல 206 எலும்புகள், 600க்கும் மேற்பட்ட தசைகள், தசைநார்கள் மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட உள்ளுறுப்புகளால் பிணைக்கப்பட்டுள்ள நம் உடல், உடற்பயிற்சிகளைச் செய்யச் செய்யத்தான் எலும்பும் தசையும் வலுப்பெற்று, மூட்டுகள் நெகிழ்வுத் தன்மை அடைந்து, அவற்றின் இயக்கங்கள் எளிதாகி, நலம்





காக்கும் உடற்தகுதியை (Physical Fit ness) நமக்குத் தருகிறது. அதற்குத்தான் உடற்பயிற்சி தேவைப்படுகிறது.

ஏரோபிக்ஸ் பயிற்சிகள் என்றால் என்ன?

நம் உடற்தகுதியை நிர்ணயிக்கின்ற உடற்பயிற்சிகளில் முக்கியமானது ஏரோபிக்ஸ் பயிற்சிகள். காற்றில் உள்ள ஆக்ஸிஜனை அதிகமாகப் பயன் படுத்திக் கொள்ளும் பயிற்சிகள் இவை. தமிழில் இவற்றைக் 'காற்றலைப் பயிற் சிகள்' என்று அழைக்கிறோம். நடப்பது, ஓடுவது, நீச்சலடிப்பது, சைக்கிள் ஓட்டுவது, கூடைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, இறகுப்பந்து, ஹாக்கி, கோக்கோ, டென்னிஸ், டேபிள் டென் னிஸ், ஸ்கிப்பிங் போன்ற விளையாட் டுகள் எல்லாமே ஏரோபிக்ஸ் வகைப் பயிற்சிகள்தான்!

ஏரோபிக்ஸ் விளையாட்டுகளை விளையாடுவதன் மூலம் வேகமாகவும் ஆழமாகவும் சுவாசிக் கிறோம். அப்போது அதிக அளவு ஆக்ஸிஜன் உடலுக்குள் சென்று ரத்தத்தில் கலக்கிறது. இத யத்துடிப்பு அதிகரிக்கிறது. இதன் பலனால் உடலில் ரத்தம் வேக மாகவும் அதிகமாகவும் சுற்றி வருகிறது. அப்போது சிறு ரத்தக் குழாய்கள்கூட அளவில் பெரிதாகின்றன. உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் ரத்தம் செல்வது அதிகரிக்கிறது. சாதாரணமாக ஒரு நிமிடத்தில் ஐந்து லிட்டர் ரத்தம் நம் உடல் முழுவதும் சுற்றிவரும். நாம் விளையாடும்போது ஐந்து மடங்கு ரத் தம்(25 லிட்டர்) அதிகமாகச் சுற்றி வரும். இதனால் உடலில் உருவாகும் கழிவுகள் விரைவில் வெளியேறி விடு கின்றன. சீக்கிரமே ரத்தம் சுத்தமாகிறது. உடலின் வெப்பம் குறைகிறது. உடலும் மனமும் புத்துணர்வு பெறுகின்றன.

தொடர்ந்து தினமும் விளை யாடுவதை வழக்கமாக்கிக் கொண்டால் பல நோய்கள் நம்மை அண்டுவதற்கு அஞ்சும். காரணம், விளையாட்டுப் பயிற்சிகள் பலவித நோய்களைத் தடுக்கும். நினைவாற்றலையும் அதிகரிக்கும்.





இன்றைய சிறுவர், சிறுமிகள் விடுமுறை நாட்களில் விளையாட்டுக்கு ஒதுக்கும் நேரம் இப்போதெல்லாம் குறைந்துவிட்டது. ஒவ்வொரு வீட்டிலும் குடிபுகுந்துள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஆக்ரமிப்புதான் இதற்குக் காரணம். இந்தப் பழக்கம் மாற வேண்டும். இவர்கள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டு விளையாட்டுக்கும் சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும்.

விடுமுறை நாட்களில் விளையாடுவதற்குக் காலை அல்லது மாலை வேளையைத் தேர்ந்தெடுப்பது நல்லது. வெயிலில் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். தினமும் இருபது நிமிடத்திலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை விளையாடுவது ஆரோக்கியத்துக்கு நல்லது.



சுவாசப்பயிற்சி


இறுதியாக ஒன்று! விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளுக்குத் தருகின்ற முக்கியத்துவத்தை சுவாசப் பயிற்சிக்கும் தர வேண்டியது அவசியம். காரணம், இன்றைய இயந்திரத் தொழில் பெருக்கத்தாலும் போக்குவரத்து நெரிசலாலும், புகை கக்குகின்ற வாகனங்களின் அதிகரிப்பினாலும் நாம் அனைவருமே மாசடைந்த காற்றைத்தான் சுவாசித்து வருகிறோம். இதன் விளைவால் அண்மைக் காலமாக மனிதருக்கு ஏற்படும் சுவாசக் கோளாறுகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, அலர்ஜி இடைவிடாத இருமல், சளி போன்ற தொல்லைகள் அதிகரித்துள்ளன. இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்றால் 'பிராணாயாமம்' என்று அழைக்கக்கூடிய சுவாசப் பயிற்சிகளை தினமும் அதிகாலையில் சுமார் இருபது நிமிடங்களுக்குச் செய்வதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக சுத்தமான காற்றைச் சரியாக சுவாசித்தாலே நம் உடலில் பாதி நோய்கள் காணாமல் போய்விடும்.

தினமும் இருபது நிமிடத்திலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை விளையாடுவது ஆரோக்கியத்துக்கு நல்லது!



சிறுகதை

யாருக்கு ஓட்டு?



ஆனை மலையின் ஒரு பகுதியான பறவைக் காட்டில் தேர்தல் நடந்தது.


குயில், மிக அதிகமான வாக்குகளைப் பெற்று முதல்வரானது. தனது ஆட்சிக் காலத்தில், பறவைகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தியது.

பறவைகள் தங்குவதற்கென புதிய மரக்கன்றுகளை நட்டு, மரங்களை வளர்த்தது. பறவைகளின் உணவுத் தேவையைக் கருதி, சிறு பள்ளங்களாக் கிடந்த இடங்களை மேலும் சற்று ஆழப்படுத்தி பொதுக் குட்டைகளாக்கி, அவற்றில் சிறிய கெண்டை மீன் குஞ்சுகளைப் போட்டு மீன் வளர்ப்பு செய்தது. மலையை ஒட்டிய பொது நிலங்களில் தானிய உற்பத்தி செய்தது. மலைக் குகைகளைச் சீர் செய்து பறவைக் குஞ்சுகள் பயில்வதற்கான கல்விக்கூடங்களாக்கியது. திடலானப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அழகு படுத்தி விளையாட்டு அரங்கமாக்கியது.

குயிலின் ஆட்சிக் காலம் பொற்காலம் என நல்ல மனம் படைத்த பறவைகள் புகழ்ந்தன.

ஆனால், ஒரு சில பறவைகளுக்கு அது பிடிக்கவில்லை. குயிலுக்கு எதிராக இயக்கங்கள் தொடங்கின.

கொக்கு, தன் சாதுரியமான பேச்சினால் பறவைகளில் ஒரு பகுதியை தன்



பக்கம் இழுக்கத் தொடங்கியது. அதன் தலைமையிலான அணி, பலமான எதிர்க்கட்சியாக உருவெடுத்தது.

குயிலின் பதவி முடிந்து, தேர்தல் வந்தது. தேர்தல் மேடைகளில் கொக்கு, வாக்காளர்களைக் கவரும் வண்ணம் பேசியது.

''இந்தக் காட்டில் ஆயிரக்கணக்கானப் பறவைகள் கூடு இல்லாமல் மரக்கிளைகளில் தங்கி இருக்கிறோம். மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் நம்மில் பலருக்கு சளி பிடித்து, தொண்டை 'கரகர'வென்று பேசவே முடியவில்லை'' என்று சொல்லி, ''லொக்...லொக்...'' என்று இருமியது, கொக்கு.

கூட்டத்தில், ''ஆமாம்...ஆமாம்'' என்று குரல்கள் ஒலித்தன.

''நான் ஆட்சிக்கு வந்தால் ஆளுக்கு ஒரு கூடு கட்டிக் கொடுப்பேன். குளிப்பதற்காக கூட்டுக்கு ஒரு குளம் வெட்டிக் கொடுப்பேன்'' என்றது, கொக்கு.

கூட்டத்தில் பலத்த கைத்தட்டல்!

ஆனால் குயில், அப்படிப்பட்ட வாக்குறுதிகளைக் கூறவில்லை. என்னென்ன செய்திடச் சாத்தியமோ அதை மட்டுமே கூறியது.

வாக்கெடுப்பு நாள் நெருங்கிவிட்

''நான் ஆட்சிக்கு வந்தால் ஆளுக்கு ஒரு கூடு கட்டிக் கொடுப்பேன். குளிப்பதற்காக கூட்டுக்கு ஒரு குளம் வெட்டிக் கொடுப்பேன்!''



டது.

பெரும்பாலான பறவைகள் கிளியிடம் சென்று, ''இந்தத் தேர்தலில் நாங்கள் யாருக்கு வாக்களிப்பது?'' என்று கேட்டன.

''குயில் சுயநலத்திற்காக எதையும் செய்யவில்லை. தனக்கென ஒரு கூடு கட்டிக் கொள்ளக்கூட இல்லை. அது செய்ததெல்லாம் பொதுநலத்துக்குத்தான். உங்கள் அறிவைக் கொண்டு நன்கு சிந்தித்துச் செயல்படுங்கள்'' என்றது, கிளி.

ஆனால் கிளியின் பேச்சு எடுபடவில்லை. கொக்கு வெற்றி பெற்றது.

கொக்கு முதல்வரான உடனே, தனக்கு ஒரு பாதுகாப்பான கூடு கட்டிக் கொண்டது. உணவுக்காக தனக்கெனச் சொந்தமாக ஒரு குளம் அமைத்து, அதில் நிறைய மீன் குஞ்சுகளை விட்டு வைத்தது. குடும்பத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்தது.

அதன் காலம் முடிந்து, அடுத்த தேர்தல் வந்து விட்டது. அப்போது அண்டங்காக்கை தலைமையிலான அணி பலமானதாக இருந்தது. அண்டங்காக்கை வாக்காளர்களைப் பார்த்து, ''என்னைத் தேர்ந்தெடுத்தால் உங்களில் யாரும் உணவு தேடிப் போக வேண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் உங்களுக்குத் தேவையான உணவை உங்கள் இருப்பிடத்திற்கே கொண்டு வந்து கொடுக்கச் செய்வேன்'' என்றது.

பறவைகள் கிளியிடம் சென்று, ''யாருக்கு வாக்களிப்பது?'' என்று கேட்டன.

அதற்கு கிளி, ''நான் உங்களுக்கு முன்பே சொல்லியுள்ளேன். நன்கு சிந்தியுங்கள். எவரைத் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு நல்லது என்று நினைக்கிறீர்களோ... அவருக்கு வாக்களியுங்கள். வாய்ப்பேச்சில் மயங்கி விடாதீர்கள்'' என்றது.

ஆனால், அண்டங்காக்கையின் இனிய பேச்சில் மயங்கிப் போன பல பறவைகள், அதற்கே வாக்களித்தன.

பதவிக்கு வந்த அண்டங்காக்கை, கொக்கு செய்துகொண்ட வசதிகளை விடவும் கூடுதலான வசதிகளை, அந்தக் காட்டில் செய்து கொண்டது. மேலும், அந்தக் காட்டுப் பறவைகளினால் தனக்கு ஆபத்து நேரிடுமானால் தப்பிச் சென்று வாழ்வதற்காக இமயமலைக் காட்டில் சில குளங்களையும், நிலங்களையும் தனக்குச் சொந்தமாக வாங்கி வைத்தது.

பறவைகளோ சரியான உணவில்லாமலும், நீரில்லாமலும் வாடின.

அண்டங்காக்கையின் பதவிக் காலம் முடிந்து, மீண்டும் தேர்தல் வந்தது.

குயில், கொக்கு, அண்டங்காக்கை அணிகள் மட்டும் அல்லாமல் புதிதாக மைனாவின் தலைமையில் ஓர் அணியும் உருவாயிற்று. நான்கு அணிகளும்

தேர்தலில் போட்டியிட்டன.

கட்சிகளின் விளம்பரத் தோரணங்களால் பறவைக் காடு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. நான்கு அணிகளும் தனித்தனியே மேடைகள் அமைத்து கொள்கை முழக்கம் செய்து கொண்டிருந்தன.

வாக்கெடுப்பு நாள் நெருங்கிவிட்டது.

கிளியைத் தேடி வந்த பறவைகள், ''நாங்கள் கடந்த தேர்தல்களில் வாக்களித்து, வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே அவர்களுக்கு வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்களே தவிர, எங்களுக்கு நன்மை செய்யவில்லை. நாங்கள் வறுமையில் வாடுகிறோம்'' என்று சொல்லி வருந்தின.

அதைக் கேட்ட கிளி, ''நல்லாட்சி புரிந்த குயிலை ஒதுக்கிவிட்டு கெட்டவர்களின் பேச்சில் மயங்கி வாக்களித்தீர்கள். அதனால்தான் உங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது'' என்றது.

''ஆமாம்! அதனால்தான் கேட்கிறோம், நல்லாட்சி புரிந்திட தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பது எப்படி?'' என்று கேட்டன பறவைகள்.

அதற்கு கிளி, ''முதலில், தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய தகுதியை நீங்கள் பெற வேண்டும். அதற்கு, நீங்கள் இதுவரையிலும் பெற்றுள்ள படிப்பினையைக் கொண்டு சிந்தியுங்கள். அந்தத் தகுதி உங்களுக்கு நிச்சயம் வரும்'' என்றது.

''உண்மைதான். எங்கள் தவறை உணர்ந்துவிட்டோம். சிந்திக்கத் தொடங்கிவிட்டோம். நடக்கப் போகும் தேர்தலின் மூலம் பறவைக் காட்டில் நல்லாட்சி அமைந்திடும்'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டுப் பறவைகள் புறப்பட்டன.



விடையைச் சொல்; பரிசை வெல் - 2ல் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு, சரியான விடைகளை எழுதியிருந்தீர்கள். வழக்கம் போல் குலுக்கல் முறையில் பத்து பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு தலா ரூ100/- வீதம் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. யூகூ, 2. நகைச்சுவைப் படங்களைத் தினமும் பார்த்து ரசித்தார். 3. கற்பகம், 4.8, 848 மீட்டர், 5. 106


பரிசு பெறுவோர்:

1.கே.ராஜேஸ்வரி - இராமானுஜபுரம்
2. எம்.லட்சுமணன் - அமரபூண்டி
3. ஜெ.ஹரீஷ்குமார் - பாண்டமங்கலம்
4. சி.அனிதா - மெட்டுக்குண்டு
5. பி.சர்வேஸ்வரன் - மதுரை
6.ஆர்.லூர்து பாக்கிய நான்ஸி - விளாத்திகுளம்
7. ர.பிரேம்குமார் - அரியலூர்
8. எஸ்.கே.பையாஸ் அஹமத் - தருமபுரி
9.எஸ்.சௌம்யா - சென்னை
10.என்.கணேஷ் குமார் - ஆற்காடு

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

குட்டீஸ் கோகுலம்

ஓடுவது யார்?





ஒன்று முதல் 35 வரையிலான புள்ளிகளை இணைத்தால் ஓடுவது யாரென்று தெரியும்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....


ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032



திருநெல்வேலி, தூய சவேரியார் மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிப்பவர் **சிந்தூரி**. 'மனித நேயம்' என்ற தலைப்பில் நடந்த பேச்சுப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசைத் தட்டிச் சென்றுள்ளார். இதற்கு 'சிகரம் 2007' என்ற சிறப்பு விருதும் சான்றிதழும் பெற்றார். மேலும் பேச்சுக் கலைக்காக மதுரை 'பாரதி யுவகேந்திரா' சார்பிலும் பரிசு பெற்றுள்ளார். சிந்தூரியின் பரிசு வேட்டை தொடர கரவொலி எழுப்புவோம்!

சிகரம் சிந்தூரி!





பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப் புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார் பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப் பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி


கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.



கராத்தே நிரஞ்சன்!



ஆவடி, டாக்டர் இராஜலட்சுமி சுந்தரராஜன் மேனிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் நிரஞ்சன். ஓவியம், பரதநாட்டியம் போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு திருவள்ளுவர் மாவட்ட அளவில் பரிசுகளை அள்ளியுள்ளார். அது மட்டுமா? கராத்தே பயிற்சி பெற்று, Brown - 2 பெல்ட் வென்று 'யுவ கலா பாரதி விருது' பெற்றுள்ளார். மேலும் வெற்றி வாகை சூடுவதற்கு நிரஞ்சனை வாழ்த்துவோம்! கராத்தே மட்டுமின்றி மற்ற கலைகளையும் கற்றுச் சிறக்க பாராட்டுவோம்







சென்னை, சீதாதேவி கரோடியா மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் முதலாம் வகுப்பு படிப்பவர் ரெங்கநாயகி. பல்வேறு தனியார் தொலைக்காட்சிகளில் குழந்தைகள் நிகழ்ச்சிகளில் பங்கேற்று, பரிசுகளையும் சான்றிதழ்களையும் குவித்துள்ளார். நடிப்பு, நடனம், பாடல் போட்டிகளிலும் பங்கேற்று, காண்போரின் உள்ளங்களைக் கொள்ளையடித்துள்ளார். 'இமயம்' தொலைக்காட்சியில் 'சுட்டி கேம்ஸ்' பகுதியில் பரிசு பெற்றுள்ளார். சுட்டி ரெங்கநாயகி, தொடர்ந்து வெற்றி நாயகியாக வலம் வர கைகுலுக்குவோம்!





சுட்டி ரெங்கநாயகி!

அ.சுரேஷ்குமார்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்
பள்ளி
மலையப்பாளையம் →





← **எம்.கவிதா,**
ஏழாம் வகுப்பு
முருக தனுஷ்கோடி
மகளிர் மேனிலைப்பள்ளி,
தண்டையார்பேட்டை



எம்.அசோக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு →
அரசு உயர்நிலைப்
பள்ளி,
சோமந்துரை
சித்தூர்.



பி.விஜயகுமார்,
எட்டாம் வகுப்பு, →
ஸ்ரீ வித்யாமந்திர்
ஆண்கள் மெட்ரிக் பள்ளி,
சேலம்



உங்கள் கைவண்ணம்!



தி.வெங்கடேஷ்,
← ஒன்பதாம் வகுப்பு,
ஜி.கே.டி.மேல்நிலைப் பள்ளி,
பெரிய
நாயக்கன்பாளையம்



இரா.அனு, →
பன்னிரண்டாம்
வகுப்பு,
ஸ்ரீ சாரதா ஈஸ்வர்
வித்யா மந்திர்
மெட்ரிக் பள்ளி,
சென்னை



டியர் சில்ட்ரன்! போன மாசம் அமேசான் காட்டுல ரவுண்ட் அடிச்சோம், இப்ப சுந்தரவனத்துக்குப் போகலாம். உலகிலேயே மிகப் பெரிய சதுப்பு நிலக் காடா சுந்தரவனம் இருக்கு! சதுப்பு



● சுந்தரி மரம்

நிலக் காடுகளை ஆங்கிலத்தில் 'மாங்குரோவ்' என அழைக்கிறாங்க. இந்தியா மற்றும் பங்களாதேஷ் பகுதிகளில் இருக்கிற இந்தக் காடுகள் 'யுனஸ்கோ'வின் 'உலகப் புராதனச் சின்னங்களின்' பட்டியலில் இடம் பெற்றிருக்கு.

சுந்தரவனக் காடுகள் கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மேக்னா ஆறுகள் பாயும் பகுதியில் அமைந்திருக்கு. ஒவ்வொரு மழைக் காலத்திலும் வங்காள முகத்துவாரம் தண்ணீரில் மூழ்கி, ஆண்டுக்கு ஆறு மாதங்கள் நீரால் சூழப் பெற்றதாகவே காணப்படுகிறது. இந்தச் சதுப்பு நிலத்தில் மட்டுமே வளரக் கூடிய தாவரங்கள் மண்டிப் பெருகி காடுகளாகி நிற்கின்றன.

சுந்தரவனக் காடுகள் 6526 சதுர மைல்கள் பரவிக் கிடக்குது. காட்டின் தென்பகுதி, வங்காள விரிகுடா கடலைச் சந்திக்கிறது. கிழக்குப் பகுதியில் பாலேஸ்வரி ஆறு பாய்கிறது. வடக்குப் பகுதியில் பயிரிடும் விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. சுந்தரவனத்தில் பாயும் ஆறுகள் நன்னீரும், உப்பு நீரும் சந்திக்கும் இடங்களாக உள்ளன. கங்கை ஆற்று நன்னீரும், வங்காள விரிகுடாவின் உப்பு நீரும் ஒன்றோடொன்று கை குலுக்கிக் கொள்கின்றன.

சுந்தரவனக் காடுகளை நம்பியே நிறைய தொழிற்சாலைகள் உள்ளன. செய்தித்தாள் தயாரிக்கும் ஆலை, தீப்பெட்டித் தொழிற்சாலை, கப்பல் தயாரித்தல், மரச் சாமான்கள் செய்யும் தொழிற்சாலை போன்றவை. ஆனால், காடுகளைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. பெருமளவில் மரங்கள் வெட்டப்பட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கும்.

குழந்தைகள் குதூகலிக்கிற மாதிரி நிறைய விஷயங்கள்

ஜாலி ஜாலி சுந்தர





* ஆட்டர்ஸ்

சுநதரவனக் காடுகளில் உள்ளன. 'சஜ் ஜேகாலி' என்ற பகுதியில் பறவைகள் சரணாலயம் ஒன்று உள்ளது. இங்கே போய் பறவைகளைப் பார்த்து மகிழ லாம். சுந்தரவனக் காடுகளில் அறுநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பறவை வகை கள் காணப்படுகின்றன. பலவகையான ஆந்தைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் 'பிரௌன் மர ஆந்தை'. மேலும் மீன் கொத்திக் கழுகுகள், வாத்து போன்ற பறவைகளும் உள்ளன.

என்ன வெறும் பறவைகளாகவே இருக்குன்னு யோசிக்கிறீங்களா? அடுத்து வர்றார் பாருங்க 'ராயல் பெங் கால் புலி'! இதுதான் இங்கே சூப்பர் ஸ்டார். சுமார் நானூறு ராயல் பெங்கால் புலி களும், சுமார் முப்ப தாயிரம் புள்ளி மான்களும் இங்கே வாழ்கின்றனவாம்.

வனம்!





* பெங்கால் ராயல் புலி

பங்களாதேஷ் பகுதியில் காட்டுப் பன்றி, மான், ஆட்டர்ஸ், குரங்குகள், எருமை மாடு, நீர்யானை போன் றவையும், ஆமை, முதலை, இராஜ நாகம் ஆகியவையும் உள்ளன.

'சுந்தரி' என்பது சுந்தரவன காடு களில் வளர்கின்ற மரத்தின் பெயர். இத னாலதான் 'சுந்தரவனம்'னு பேரு வந்த தாகச் சொல்றாங்க. இந்த 'சிலு சிலு காட்டுல ஒருநாள் 'டேரா' போட்டுட்டு அப்புறம் வீட்டுக்குப் போகலாமா சில்ட்ரன்?





கடியோ கடி!

''மழையில நனைஞ்சதுனாலயா உன் மண்டை வீங்கிடுச்சு.''

''ஆமா. நான் நனைஞ்சது 'கொட்டுற' மழையில...''

☺ ☺ ☺

''உங்க மாமா டில்லிக்குப் போய்ட்டாராமே, அங்கே என்னவா இருக்காரு?''

''அங்கேயும் எனக்கு மாமாவாத் தான் இருக்கார்.''

- மா.கண்ணன், இராஜபாளையம்

☺ ☺ ☺

''நம்ம நாட்டுக் கண்டுபிடிப்பை வாங்கியிருக்கியா, என்னடா அது?''

'' எல்லாப் பாடத்திலேயும் 'ஜீரோ' வாங்கி இருக்கேன்.''

- எச். சுல்த்தானா, கீழக்கரை

☺ ☺ ☺

''டெலிபோனைச் செல் அரித்தால் என்ன ஆகும்?''

'''செல்'போன் ஆகும்!''

- வீரணம் சரவணன்

☺ ☺ ☺

''உங்க அப்பா 'மூடி டைப்'பா இருக்காரே, எங்கே வேலை பார்க்குறாரு?''

''பூட்டு கம்பெனியில!''

- ராம்.ஆதிநாராயணன், தஞ்சாவூர்

☺ ☺ ☺

''இரக்க குணம் உள்ள கிழங்கு எது தெரியுமா?''

''கருணைக் கிழங்கு!''

- கு.அருணாசலம், தென்காசி

ச.ந.கண்ணன்

‘ஒகினவா’ என்கிற தீவைச் சேர்ந்தவரால் ஜப்பான் மக்களுக்கு கராத்தே அறிமுகமானது!





காக்கும் கலைகள்!

கராத்தே, குங்ஃபூ, ஜூடோ ஆகிய விளையாட்டுகள் ‘மார்ஷியல் ஆர்ட்ஸ்’ என்கிற தற்காப்புக் கலைகளின் கீழ் வருவன. இவை சைனா, திபெத், இந்தியா போன்ற நாடுகளில் உருவாக்கப்பட்ட கலைகள். உறுதியான மன வலிமை பெறுவதற்குத் தற்காப்புக் கலைகள் உதவுகின்றன.

கராத்தே என்பது பல்லாயிரக் கணக்கான வருடங்களாக விளையாடப்பட்டு வரும் ஒரு விளையாட்டு. ஜப்பானின் அதி

காரபூர்வமான தற்காப்புக் கலை மற்றும் விளையாட்டாகும்! இந்த விளையாட்டில் உடலின் எல்லா பாகங்களைக் கொண்டும் விளையாடலாம். கை, கால், முட்டி போன்றவற்றை பயன்படுத்தலாம். கராத்தே என்றால் 'ஆயுதங்கள் இல்லாமல் வெறும் கையால் சண்டை போடுவது' என்று அர்த்தம்!



'ஒகினவா' என்கிற தீவைச் சேர்ந்தவரால் ஜப்பான் மக்களுக்கு கராத்தே அறிமுகமானது. 'ஷோட்டாகன்' என்கிற இவரது கராத்தே பயிற்சி பிரசித்தி பெற்றது.

குத்துச் சண்டை, மல்யுத்தம், கிக் பாக்ஸிங் ஆகியவற்றைக் காட்டிலும் கராத்தே மகத்தானது, பலராலும் பாராட்டுப் பெற்ற ஒரு தற்காப்புக் கலை. ஆபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் மனத்தை சமநிலையில் வைத்திருக்கவும் கராத்தே உதவுகிறது. 'பஞ்ச் செய்வது, 'ப்ளாக்' பண்ணுவது, 'கிக்' அடிப்பது போன்றவை கராத்தேயின் அடிப்படைப் பயிற்சிகள். கியோன் (அடிப்படை பயிற்சிகள்), கதா(வடிவம்), பங்கை (டெக்னிக்குகளைப் படிப்பது), குமுதி ஆகியவை கராத்தேவின் பயிற்சி முறைகள்.

அடிப்படையாக 'வொய்ட் பெல்ட்' அளிக்கப்படும். பிறகு 'பிரவுன் பெல்ட்.' இறுதியாக கறுப்பு பெல்ட்! தகுதி மற்றும் வலிமை இதை அடிப்படையாகக் கொண்டு இவை வழங்கப்படுகின்றன. 'ப்ரூஸ் லீ' தமது படங்களில் கராத்தே கலையை உபயோகித்து எதிராளிகளுடன் சண்டை போடுவார்.



எப்பேர்ப்பட்ட சூழலிலும் எதிராளியை வீழ்த்தும் கலைதான் குங்ஃபூ!

ஜூடோ என்பது சமீபகாலமாக, அதாவது, பத்தொன்பதாவது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு தற்காப்புக் கலையாகும். 'ஜிகாரோ கேனோ' (Jigoro Kano) என்கிற ஜப்பானியரால் கண்டுபிடிக்கப்பட்ட தற்காப்புக் கலையாகும். மார்ஷியல் கலைகளில் ஜூடோ தான் முதலில் ஒலிம்பிக் விளையாட்டில் இடம் பிடித்தது. காயங்கள் எதுவுமில்லாமல் ஒரு தற்காப்புக் கலை வேண்டும் என்று கேனோ விரும்ப, கண்டுபிடித்த விளையாட்டு இது. ஜூடோ என்றால் மென்மை என்று அர்த்தம்!

ஜூடோ விளையாட்டில் எதிராளியை



பூமியில் தூக்கி எறியவேண்டும். எதிராளியின் முதுகை பூமியில் அழுத்த வேண்டும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும். மற்றபடி கராத்தே, குங்பூ போல ஜூடோவில் யாரும் சண்டை யிட்டுக் கொள்ளமாட்டார்கள். அதே போல தூக்கி எறியப்படும்போது, எப்படி பாதுகாப்பாக கீழே விழுவது என்பதை ஜூடோவில் கற்றுக்கொள்ளமுடியும். சம அளவில் எடை உள்ள இருவர் மோதும் விளையாட்டு இது.

குங்ஃபூ சைனாவின் பாரம்பரிய தற்காப்புக் கலை. இது சைனாவில் உள்ள 'ஒப்ரா' பள்ளிகளில் இன்றும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. திரைப்பட நடிகர் ஜாக்கி சானால் இந்த தற்காப்புக் கலை இன்று பட்டி தொட்டியெல்லாம் பரவிக்கிடக்கிறது. குங்ஃபூ என்பது ஸ்டைலான தற்காப்புக் கலை. இதில் வேறுபாடுகள் கொண்ட 72 விதமான வடிவங்கள் உள்ளன. பண்டைக் கால ஷோலின் சண்டை முறைகள் இதில் பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றன.

(எப்பேர்ப்பட்ட சூழலிலும் எதிராளியை வீழ்த்தும் கலைதான் குங்ஃபூ.) அந்தக் காலத்தில் விலங்குகளுடன் சண்டையிட கண்டுபிடிக்கப்பட்ட தற்காப்புக் கலைகளில் குங்பூவும் ஒன்று.



பெரும்பாலும் மார்ஷியல் கலைகள் இந்தியாவிலிருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது. புத்த பிட்சுக்கள் இந்தியாவிலிருந்து தற்காப்புக் கலைகளை உலகம் முழுக்கப் பரப்பினார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. இந்த மூன்று மார்ஷியல் கலைகளிலும் பொதுவான அம்சங்கள் உண்டு. அவை:



✦ எதிரி நம்மைத் தாக்க வரும் முன்பு நாம் அவரைத் தாக்க வேண்டும்.

✦ எதிராளியின் பலம், பலவீனம் இரண்டும் அறியவேண்டும்.

✦ எப்போதும் எதிராளியைக் குறைத்து மதிப்படவே கூடாது.

✦ உடல் வலிமையோடு மன வலிமையையும் அடைய வேண்டும்.



தென்றலும் சென்னையில் இருந்திருந்தால் நன்றாகப் படித்திருப்பாள்'' என்று தாத்தா ஏக்கத்துடன் சொன்னார்.

''பேசாம தென்றல் சென்னையிலேயே இருக்கட்டுமே'' என்றாள் ஆனந்தி.

தாத்தா விழித்தார். ''அதெப்படி முடியும் ஆனந்தி? உங்க வீட்டுல அப்பா, அம்மா எல்லாம் ஒத்துக்

கணுமே.''

''இல்லை தாத்தா. நான் எப்படியாவது பேசி அவங்களைச் சரி கட்டிட றேன். நீங்க தென்றலோட கதையைச் சொன்னதுல இருந்து எனக்கு மனசே ஒரு மாதிரி ஆயிடுச்சு. உங்ககிட்ட சொல்லாம நாங்க இப்படிச் செய்தது தப்புன்னு இப்போ தோணுது.''

தாத்தா ஆனந்தியின் தலையை மெதுவாக வருடிக் கொடுத்தார். ஆனந்திக்கு அழுகை வந்தது.

''படிக்கிறதுக்கு வாய்ப்பு இல்லாம இங்கே ஒரு பொண்ணு கஷ்டப் பட்டுக்கிட்டிருக்கா. நான் என்ன டான்னா ஸ்கூலை விட்டுட்டு, இங்கே ஓடிவந்துட்டேன்'' என்றாள்.

தாத்தா ஆனந்தியின் கையைப் பிடித்து வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார். சிறிது நேரம் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு, வீட்டை நோக்கி நடக்க ஆரம் பித்தனர்.

''போன மாசம் இங்கே ஒரு ஃபாரஸ்ட் ஆபிஸர் வந்திருந்தாரு. மரங்கள், விலங்குகளைப் பத்தி ஏதோ கணக்கெடுத்தார். அப்போ அவரு எனக்கு நல்ல தோஸ்தாயிட்டாரு. அவருகிட்ட பேசிக்கிட்டிருந் தப்போ, தென்றலைப் பத்திச் சொன்னேன். நல்ல மனுஷர், தென்றலை உடனே கூட் டிக்கிட்டு சென்னைக்கு வாங்க. அங் கேயே உங்க இரண்டு பேரையும் தங்க வைக்கிறேன். தென்றல் அவசியம் படிக் கணும்னு சொன்னார்'' என்றார் தாத்தா.

''அப்படியா எங்கே இருக்காரு அவரு?''

''தெரியலை. ஒரு சீட்டுல முகவரி எழுதிக் கொடுத்தாரு. வீட்டிலதான் வைச்சிருக்கேன்.''

மௌனமாக நடந்தார் தாத்தா. பிறகு, திடீரென்று ஆனந்தியிடம் திரும்பினார்.

''என்னால் சென்னையில வாழ முடியாதும்மா. இயந்திரத்தனமான வாழ்க்கை. எப்பப்பார் கால்ல சக் கரத்தை மாட்டிக்கிட்டு ஓடிக்கிட்டே இருக்கணும். எல்லாமே விலை அதி கம். காற்றுகூட சுத்தமா இல்லை. நான் இப்படியே இருந்துடறேன். காடுதான் எனக்கு வீடு. ஆனால்... ஆனால்...''

''சொல்லுங்க தாத்தா.''

''தென்றலைத் தொடர்ந்து இங்க வச்சிக்க முடியாது. என்னால் அவ எதிர்காலம் பாழாயிடக்கூடாது. உன்னை மாதிரியே அவளும் நிறைய படிக்கணும். உலக விஷயங்களைத் தெரிஞ்சுக்கணும். நாலு இடங்களுக்குப் போய் நாலு பேரோடு பார்த்துப் பேசிப் பழகணும்.''

''அதுக்குத்தான் தாத்தா நானும் சொல்றேன். அவ எங்க வீட்டிலேயே

11

என் பெயர் தென்றல்!

இருக்கட்டுமே.''

''இல்லைம்மா. நான் அந்த ஆபிஸர் வீட்டுக்குப் போகலாம்னு முடிவு செஞ்சிட்டேன். அவரைப் பார்த்துப் பேசறேன். அவர் வீட்டுல தென்றல் தங்கியிருக்கிறதுதான் சரியா இருக்கும்'' என்றார்.

''தாத்தா நாம உடனே சென்னைக்குப் போகலாம்'' என்றாள் ஆனந்தி.

''ஆமா, எனக்கும் தென்றலை உடனே பார்க்கணும் போல இருக்கு. அவள் உன் வீட்டைக் கண்டுபிடிச்சு ஒழுங்கா போனாளா இல்லையான்னே நமக்குத் தெரியாது.''

ஆனந்திக்கும் நீண்ட நேரமாக அது தான் கவலை.

''வீட்டுக்குப் போய் உடனே கிளம்பிடுவோம். ராத்திரி ரயிலைப் புடிச்சுப் போய்டுவோம்.''

குதூகலமாகக் குதித்தபடி வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தாள் ஆனந்தி. தாத்தா மாங்காய் பையைக் கீழே வைத்து விட்டு, சிறிது நேரம் இளைப் பாறிக்கொண்டார்.

ஹாய் குட்டீஸ்!

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

சிறுவர் சங்கத்தில் உறுப்பினரானவர்கள், பள்ளி அல்லது வீட்டு முகவரியை மாற்றினால் எங்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவும்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)



"எனக்கும் தென்றலை உடனே பார்க்கணும் போல இருக்கு. அவள் உன் வீட்டைக் கண்டுபிடிச்சு ஒழுங்கா போனாளா இல்லையான்னே நமக்குத் தெரியாது!"

அந்த அறையின் மூலையிலிருந்த ஒரு பெரிய டிரங் பெட்டியைத் திறந்தார் தாத்தா. தேட ஆரம்பித்தார். கால் மணி... அரை மணி... தாத்தாவின் முகத்தில் பதற்றம். பெட்டியை அப்படியே நகர்த்தி வைத்துவிட்டு, வீட்டுக்குள்ளே தேட ஆரம்பித்தார். அலமாரியில்... அரிசி பானையில்... அவர் உடைகளுக்கிடையே...

''ஆனந்தி இங்கே வச்சிருந்த முகவரியைக் காணோமே.''

ஆனந்திக்குத் திக்கென்றது.

''பொறுமையா தேடிப்பாருங்க தாத்தா நிச்சயம் கிடைக்கும்.''

அரை மணிக்கு மேல் தேட முடியவில்லை. அலுப்பு தட்டிவிட்டது. ஒரே அறை. எத்தனை முறைதான் தேடுவது?

''சரி விடுங்க தாத்தா. முதல்ல நாம சென்னைக்குப் போவோம். தென்றலைப் பார்ப்போம். அப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிப்போம். எங்க அப்பா கிட்ட சொன்னா அவர் உதவி செய்வார். அவரும் ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட்லதான் இருக்கார்.''

தாத்தா அரைகுறையாகத் தலையசைத்தார். இரண்டே நிமிடங்களில், ஒரு சிறு பையுடன் கிளம்பிவிட்டார். இருவரும் வீட்டை விட்டு நடக்க ஆரம்பித்தனர். பதினைந்து நிமிடங்களில் ஓடை. ஆனந்தி முன்னர் இறங்கிய இடம். அங்கிருந்து குறுக்கு வழி மூலமாக மேலும் பதினைந்து நிமிடங்கள் நடந்தால் ரயில் நிலையம்.

டிக்கெட் வாங்கிக்கொண்டு வண்டி வந்ததும் ஏறி அமர்ந்தனர். தாத்தா தனக்கு நினைவு வந்தவரை சம்பவங்களை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே வந்தார். ஒரு கட்டத்தில் அவரும் தூங்கி விட்டார். ஆனந்தியும் தூங்கி விட்டாள்.

தென்றல் கண் விழித்தாள். காலை ஆறு மணி. அப்பா இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். படுக்கையைவிட்டு எழுந்தாள். ஜன்னல் கதவைத் துளைத்துக்கொண்டு மெலிதாக உள்ளே நுழைந்தது ஒரு சூரியக் கதிர்.

'ஆனந்தி இன்னமும் தூங்கிக் கொண்டிருப்பாள். காலையில் சீக்கிரம் எழுந்திருக்க இன்னமும் பழகிக்கொள்ளவில்லை அவள். பாவம் தாத்தா! அவருக்கு விஷயம் தெரிந்திருக்காது. ஆனந்தியை அழைத்துக்கொண்டு காட்டுக்குப் போயிருப்பார். அல்லது, ஓடைக்குப் போயிருப்பார்கள்' என நினைத்தாள்.

நகர வாழ்க்கை அப்படி ஒன்றும் மோசமாக இல்லை. காட்டில் வாழ்வது போல் இங்கே இருக்க முடியாது என்பது நிஜம். ஆனால் நகர வாழ்க்கைக்கே உரிய சுவாரஸ்யங்களும் இங்கே இருக்கத்தான் செய்கின்றன. பெரிய வீடு. வசதிகள், அன்பான அம்மா, அப்பா. வாசல் பக்கம் வந்து நின்றுகொண்டாள் தென்றல்.


''ஆனந்தி அங்கே என்ன பண்றே? இங்கே வா! '' என அழைத்தாள் அம்மா. திரும்பி நடப்பதற்குள் வாசல் கதவுக்கு அருகே இருந்தபடி யாரோ கூப்பிட்டார்கள்.

''தென்றல்!''

(அடுத்த இதழில் முடியும்)

குட்டீஸ் கோகுலம்

முதலையிடமுள்ள கோப்பையை அடைய, வீரனுக்கு வழி காட்டுங்களேன்!



வழி காட்டுங்கள்!

சிறுகதை!

சிங்கராஜாவின் ஆட்சியில் 'சூப்பர் ஃபோலீஸ்' நிர்வாகம் கன ஜோர். அழகான சிறுகதை!

- டி.ஈஸ்வரி, திசையன்விளை

அறிவியல்!

'மேரி க்யூரி' பற்றிய தெரியாத பல அரிய தகவல்களை 'வேதியியல்' பகுதி மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது. பள்ளி கல்லூரி பாடப் புத்தகத்தில்கூட இவ்வளவு படித்ததில்லை.

- த.ஞானசெல்வன்,
பன்னிரண்டாம் வகுப்பு,
டபிள்யூ.எஸ்.காலேஜ்,
நெல்லை

கவிதை!

'என்ன பயன்?' என்ற கவிதை எளிமையாகவும் இனிமையாகவும் மற்றவர்க்குப் பயன்தரும் வாழ்க்கை வாழ வேண்டும் என்ற சிறந்த கருத்தை எடுத்துரைத்தது.

- கா.சிந்துஜா, சென்னை

வருத்தம்!

இந்த மாத அறிவியல் சிறப்பிதழ் சுவையாக, பயனுள்ளதாக இருந்தது. ஆனால் இந்திய அறிஞர்களைப் பற்றி பெரியதாகக் குறிப்பிடாதது சற்று வருத்தம்!

- இ.பு.ஞானப்பிரகாஷ், சென்னை

ஆச்சர்யம்!

சிறுவர்களின் அறிவுப் பசியைத் தூண்டிய 'ஆர்தர் மே' தமது இருபதாவது வயதிலேயே ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஆனார் என்பது ஆச்சர்யமாக உள்ளது.

- எல்.கே.நர்கீஸ், த.முருங்கப்பட்டி

பாராட்டு!

ஏலியன் நிஜமோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் அட்டைப் படம் திகிலடைய வைத்தது. வடிவமைத்தவருக்குப் பாராட்டுக்கள் பல!

- எஸ்.கே.அபிஷேக், நெய்வேலி



திகிலடைய வைத்தது!

மகிழ்ச்சி!

மாதந்தோறும் ஒரு சிறப்பிதழை வழங்கி, மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு கோகுலம் வித்திடுவது மகிழ்ச்சியாக உள்ளது.

- விக்கிரமாதித்தன்,
ஜெடர்பாளையம்

குப்பன் என்று ஒரு சிறுவன்
குறுக்கு புத்தி நிரம்பியவன்
எப்போ எதனைச் செய்தாலும்
ஏமாற்றிடவே யோசிப்பான்

பள்ளியில் வைத்தனர் பந்தயம்
பரிசோ ரூபாய் ஆயிரம்!
வென்றால் கிடைக்கும் நிச்சயம்
வேகம் நிரம்பிய சாகசம்!

பலரும் பெயர்களைத் தந்தனரே
பயிற்சியை அன்றே தொடங்கினரே
பல மைல் தூரம் ஓடினரே
பலநாள் முயற்சியைத்
தொடர்ந்தனரே

குப்பனும் அதிலே சேர்ந்தனனே
கூடவே குமார் இணைந்தானே!
தோழர்கள் இருவரும் உறுதியுடன்
தினமும் பயிற்சி செய்தனரே

தனிமையில் குப்பன் சிந்தித்தான்
தனது வேகத்தை யோசித்தான்
மற்றவர் பயிற்சியும் கவனித்தான்
மாற்று வழியைத் தேர்ந்தெடுத்தான்.

குமாரின் வேகத்தை முந்திட
குப்பனால் நிச்சயம் முடியாது



வாண்டுதாசன்

பந்தயம்!



மற்றவர் வேகமும் போதாது
மறுக்க இயலா முடிவிது

பந்தயம் நாளை நடக்குதாம்
பயிற்சி இன்றே கடைசியாம்
குப்பனின் புத்தி விழித்ததாம்
குயுக்தி செய்ய நினைத்ததா'

'ஓடும் குமாரின் கால்களை
இடறி விழச் செய்திடணும்
நண்பன் போட்டியில் விலகிடணும்
நமக்கே பரிசு கிடைத்திடணும்'

நான்கு கால்கள் ஓடின
நண்பன் கால்களே முந்தின
குப்பன் கால்கள் குறுக்கிட
குமாரின் கால்கள் தடுமாற

பிணைந்தே இருவரும் விழுந்தனரே
பிறகு நடந்ததோ பரிதாபம்!
குமார் கால்களில் சிறு தேசம்
குப்பன் கால்களில் பெரும் காயம்!

சிறிது நேர ஓய்வின் பின்
சரியாய் குமார் நடந்தனனே!
தவறாய்ச் சிந்தித்த குப்பனோ
தவழும் நிலையை அடைந்தனனே!

போட்டி நாளும் வந்தது
பரிசு குமாருக்கே சென்றது
தவறை குப்பன் உணர்ந்தனன்
தண்டனை ஏற்றுத் திருந்தினன்!



அக்டோபர் மாதத்தில் பல முக்கிய தினங்கள் வருகின்றன. அவற்றில் சில:

உலக முதியோர் தினம்:

இருபதாம் நூற்றாண்டில் மருத்துவ உலகம் அபாரமான வளர்ச்சியைக் கண்டது. அதன் பலனாக பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. மனித இனம் நோய்வாய்ப்பட்டு இறப்பது குறைந்து, வாழ்நாள் நீண்டது. 1950 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஐம்பது வருடங்களுக்கும் குறைவாக இருந்த மனித ஆயுட்காலம், அதன் பிறகு சுமார் இருபது ஆண்டுகள் அளவுக்கு அதிகமானது. இப்போது 60 கோடியாக உள்ள முதியவர்கள் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டு வாக்கில் இருநூறு கோடியாக அதிகரிக்கும் என்று ஐ.நா.சபை கணக்கிட்டுள்ளது. ஆகவே முதியவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் உடல் மற்றும் மன நலத்தை காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் முதல் தேதி 'உலக முதியோர் தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது.

உணவு தினம்!



உலக பிராணிகள் நல தினம்:

இந்த பூமியில் ஆயிரக்கணக்கான விலங்கினங்கள் இருக்கின்றன. ஆனால் பல இனங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டன. அப்படி விலங்கினங்கள் பூண்டோடு அழிவதைத் தடுக்கவும், விலங்குகள் குறித்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தி, அவற்றை அழிவிலிருந்து காக்க வலியுறுத்தியும், 1931ஆம் ஆண்டு 'ஃபிளாரன்ஸ்' நகரில் சுற்றுச் சூழல் ஆர்வலர்களால் அக்டோபர் நான்காம் நாள் உலக பிராணிகள் தினம் கொண்டாடப்பட்டது.

இந்திய விமானப்படை தினம்:

1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டாம் தேதி, பத்தொன்பது படை வீரர்கள், ஆறு அதிகாரிகள், நான்கு சிறிய படை விமானங்கள் ஆகியவற்றுடன் மிகச் சிறிய அளவில் பிரிக்கப்படாத இந்திய நாட்டின் கராச்சி நகரத்தில் துவக்கப்பட்டதுதான் 'இந்திய விமானப்படை'. இரண்டாம் உலகப் போரின்போது ஓரளவுக்கு விரிவு படுத்தப்பட்டது. இன்று உலக நாடுகள் மத்தியில் இந்திய விமானப்

படைக்கு ஒரு முக்கிய இடம் உள்ளது. இந்திய விமானப்படை துவக்கப்பட்ட அக்டோபர் எட்டாம் நாள், 'இந்திய விமானப்படை தினமாக' கொண்டாடப்படுகிறது.

உலக கண் பார்வை தினம்:

உலகம் முழுவதிலுமாக மூன்று கோடியே எழுபது லட்சம் பேருக்கு கண்பார்வை தெரியவில்லை என்பது அதிர்ச்சியூட்டும் உண்மை. மேலும் ஒரு கோடியே இருபது லட்சம் பேர்களுக்கு பார்வையில் குறைபாடு இருக்கிறது. கண் பார்வை அற்றவர்களின் நிலைமையை உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், பார்வைக் குறைபாடு இருப்பவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் அக்டோபர் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை உலக கண் பார்வை தினம் கொண்டாடப்படுகிறது. அகில உலக அளவில் தொண்டாற்றி வரும் அரிமா சங்கம் இதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

உலக உணவு தினம்:

ஐ.நா.சபையின் அங்கமான உணவு மற்றும் விவசாய அமைப்பு 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் துவக்கப்பட்டது. அதனைக் குறிக்கும் விதமாக ஆண்டுதோறும் அதே தினத்தில் 'உலக உணவு தினம்', உலகத்தில் சுமார் 165 நாடுகளில் கொண்டாடப்படுகிறது. ஒரு குழந்தையின் முதல் இரண்டு வயதில் ஏற்படும் மூளை வளர்ச்சி மிக முக்கியம். அதற்கு சத்தான உணவு மிகவும் அவசியம். அதற்கு முக்கியத்துவம் அளித்து கொண்டாடப்படுவதே உலக உணவு தினம்!

மேலும் சில தினங்கள்:

காந்தி ஜெயந்தி - அக்டோபர் 2

தேசிய தபால் தினம் - அக்டோபர் 10

ஐ.நா.தினம் - அக்டோபர் 24

உலக சிக்கன தினம் - அக்டோபர் 30





பரிசு ரூ.1000/-

விடையைச் சொல்: பரிசை வெல் - 4

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து, இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி 10.10.2007

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32



கேள்விகள்:

1. நத்தையும், மண்புழுவும் யாரை முழுமையாக வரைந்தனர்? ....

2. பெய்ஜிங் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் மொத்த வீரர்களின் எண்ணிக்கை..

3. 'சுந்தரி' என்பது..

4. ஜூடோவைக் கண்டுபிடித்த ஜப்பானியர் பெயர்..............................

5. 'ஜேம்ஸ் பாண்ட்' என்ற பெயரைக் கொண்டவர் ஒரு ....

என் பெயர்	: ....
வகுப்பு, பள்ளி	: ....
	: ....
வீட்டு முகவரி	: ....
	....
	....

அடுத்த இதழ்...

நவம்பர் 2007

கோகுலம் சிறுகதைச் சிறப்பிதழ்!

நெடுங்கதை



மந்திரக் கதை

'கலகல' கதை



குரான் கதை

கவிதைக் கதை

நாடோடிக் கதை

புராணக் கதை

அமரர் கதை

ஆங்கிலக் கதை

புதிர்க்கதை

பைபிள் கதை

அறிஞர் கதை



அறிவியல் கதை


தயாரா இருங்க குட்டீஸ்!



திகில் கதை

தேன் கனி மொழி

கருத்து, படம் : பிள்ளை





கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்

பெயர் மற்றும் விவரங்கள் 17-ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka